Registered as a Newspaper

# உதயன்

புதன் பெரும்கை உள்ளே...

சுடர் : 37 | கதிர் : 327 | புதன்கிழமை 19 ஒக்ரோபர் 2022 | ஐப்பசி 02 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50

## 22 போதை மாத்திரைகளுடன் அச்சுவேலியில் ஒருவர் கைது!



யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் 22 போதை மாத்திரைகளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே 43 வயதுடைய குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-20-27)

## புக்கர் விருதை வென்றார் ஷெஹான் கருணாதிலக்க



கொழும்பு, ஒக். 19

இலங்கை நாவலாசிரியர் ஷெஹான் கருணாதிலக்க, உலகின் மிகச் சிறந்த இலக்கிய விருதுகளில் ஒன்றான புக்கர் விருதை வென்றுள்ளார்.

15

## யாழ். மாவட்ட பண்பாட்டு விழா வெள்ளியன்று!

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு, மாவட்ட பண்பாட்டுப் பேரவை என்பன இணைந்து நடத்தும்

06

## மர்மமான முறையில் இளைஞர் உயிரிழப்பு

### கரவெட்டியில் துயரம்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம் - கரவெட்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் நேற்று உயிரிழந்துள்ளார். நீர்வேலிப் பகுதியில் தங்கிநின்று

13

## பாதுகாப்புத் துறைக்கு 54 ஆயிரம் கோடி ரூபா

### 2023இன் அரச செலவினங்கள் நாடாளுமன்றில் முன்வைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் 2023 ஆம் ஆண்டுக்கான அரச செலவினத்தில் பாதுகாப்புத் துறைக்காக மிகப்பெரும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி 53 ஆயிரத்து 920 கோடி ரூபா பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

06

## பேருந்து மோதி முதியவர் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 19

மன்னார் - மாந்தை மேற்குப் பகுதியில் பேருந்து மோதி முதியவர் ஒருவர் உயிரிழந்தார். சாத்தான்குளம் பகுதியை

13

## நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் குழு

கொழும்பு, ஒக். 19

இலங்கையில் வாழும் பல்லின மக்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும், மற்றும் வடக்கு - கிழக்கு

13

## வடக்கு மாகாணத்தில் கனமழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

மத்திய வங்காள விரிகுடாவில் முல்லைத்தீவுக்குக் கிழக்காக ஆயிரத்து 100 கி.மீ.

06

## கத்தியால் வெட்டி சங்கிலி கொள்ளை

### முதியவருக்குப் படுகாயம் சங்கானையில் பாதகம்

யாழ்ப்பாணம், ஒக். 19

சங்கானையில் வங்கியொன்றுக்கு அருகில் முதியவர் ஒருவரைக் கத்தியால் வெட்டி அவர் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி கொள்ளை

15

## 21 வயது யுவதி சுட்டுக்கொலை!

### நெடுங்கேணியில் பயங்கரம்

வவுனியா, ஒக். 19

வவுனியா, நெடுங்கேணிப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் யுவதியொருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். துரைராஜ

13

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் திட்டமில்லை!

### சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 19

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்காக எந்தவொரு கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர்

06



## மன்னாரில் எரிபொருள் வழங்குமாறு மீனவர்கள் போராட்டம்!

மன்னார், ஒக். 19

மீன்பிடிக்குத் தேவையான எரிபொருள்களை உரிய நேரத்தில், தாமதமின்றிப் பெற்றுத்தர வேண்டுமென்று மன்னார் - வங்காலையில் நேற்று மீன

15

## கோண்டாவில் சர்வதேச மைதானம் மணிவண்ணனின் திட்டம் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

கோண்டாவிலில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைக்கும் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் முயற்சியை யாழ். மாநகர சபையின் நேற்றைய

13




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தாமதம் நீடிக்குமானால் பெரும் நெருக்கடி எழும்

## கலாநிதி பிரியங்க எச்சரிக்கை

**கொழும்பு, ஒக்.19**

**நாட்டின் கடனை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் காலதாமதமின்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

உலகில் ஏனைய 54 நாடுகள் கடன் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன என்று ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் அறிவித்துள்ளது. உலகளாவிய கடன் நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னர் கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தை நிறைவு செய்வது இலங்கைக்கு நன்மை பயக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மேலும் தாமதமானால் இலங்கையில் வருமானம் குறைந்த மக்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கடன் வழங்கும் நாடுகளின் நம்பிக்கையைப் பெற வேண்டிய நடவடிக்கை தாமதமின்றி உடனடியாக இலங்கை மேற்கொள்ள வேண்டும். இல்லை என்றால் நாடு சந்திக்கப் போகும் நெருக்கடி மிகவும் பாரதூரமானதாக இருக்கும் - என்றார்.

அதேவேளை, பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

22 கடன் வழங்கும் நாடுகளை உள்ளடக்கிய பரிஸ் கிளப், கடன் நெருக்கடிக்கு விரைவான தீர்வு காணும் இலங்கையின் முயற்சிகளுக்கு அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது. ஆயினும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கு ஏனைய நாடுகளும் உடன்படவேண்டும்.

பரிஸ் கிளப்புக்குள் இலங்கைக்கு அதிக கடன் வழங்கும் நாடுகளுக்கு இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் உள்ளடங்கவில்லை. அவ்வாறான நாடுகளின் அனுமதி பெறுவது கட்டாயமாகும். இல்லை என்றால் நாடு மிகவும் ஆபத்தான நிலைக்குள்ளாகும் - என்றார். (எ)

# பொய்யாக முறைப்பாடு சீனப் பிரஜைக்கு சிக்கல்

கொழும்பு, ஒக்.19

துறைமுக நகரின் களஞ்சியம் ஒன்று உடைக்கப்பட்டு அதிலிருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொய்யான முறைப்பாடு அளித்தார் என்று கூறப்படும் துறைமுக நகரின் கொள்முதல் அதிகாரியான சீனப் பிரஜை லி சி ஹு என்பவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உண்மையான தகவல்களை மறைத்து, பொய்யான தகவல்களை முன் வைத்து , பொய் முறைப்பாட்டை வழங்கினார் என்று துறைமுகப் பொலிஸார் இந்தச் சீன நாட்டவருக்கு எதிராக கொழும்பு நீதிவான் நீதிமன்றில் விடயங்களை முன் வைத்தனர்.

அதையடுத்து சைனா ஹாபர் நிறுவனம், கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு - 1 எனும் முகவரியைக் கொண்ட துறைமுகநகரத்தின் கொள்முதல் அதிகாரியான லி சு ஹு என்பவரை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டுள்ளது.

துறைமுக நகரின் களஞ்சியம் ஒன்று உடைக்கப்பட்டு, அதனுள் இருந்த செப்புக் கம்பிகள் போன்ற பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று இந்தக் கொள்முதல் அதிகாரி துறைமுக பொலிஸாருக்கு அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார். பொலிஸாரின் விசாரணையில் அங்கிருந்த பொருள்கள் திருடப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. அதையடுத்தே கொள்முதல் அதிகாரிக்கு எதிராகப் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# பொருளாதார நெருக்கடிக்கு கோத்தாவே முழுப்பொறுப்பு

## நாலக கொடஹேவா குற்றச்சாட்டு



பொருளாதார நெருக்கடிக்கு தாம் காரணமில்லை என்பதை காண்பிக்கும் வகையில் ஆளும் தரப்பினர் நாட்டை வலம் வருகிறார்கள். கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச, எஸ்.ஆர். ஆட்டிக்கல, லக்ஸ்மன் மற்றும் கப்ரால் ஆகியோரே நாட்டின் பொருளாதார பாதிப்புக்கு முதனிலை பொறுப்புதாரிகள்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமது குறைகளை மறைத்துக் கொள்ள பிறரை விமர்சிப்பது நகைப்புக்குரியதாகும். துறைசார் நிபுணர்களின் ஆலோசனையால் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பலவீனமடைந்தார் எனக்கூறி ஆளும் தரப்பினர்கள் நாட்டை வலம் வருகின்றனர். நாவலப்பிட்டி நகரில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் கட்சிக் கூட்டத்திலும் இவ்வாறே அவர்கள் கூறினார்கள்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தில் விவசாயத்துறை அமைச்சு பதவி வகித்தவர் தான் கோத்தாபய ராஜபக்சவை இரசாயன உரம் மற்றும் சேதன பசளை விவகாரத்தில் தவறாக வழிநடத்தினார்.

இரசாயன உரத்தைத் தடை செய்து, ஒரே கட்டமாக சேதன பசளைத் திட்டத்தைச் செயற்படுத்த முடியாது என விவசாயத் துறை அமைச்சின் செயலாளர்கள் ஆலோசனை வழங்கிய போது விவசாயத்துறை அமைச்சர் அவர்களை பதவி விலக்கி, சேதனப் பசளைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் என ஜனாதிபதியைத் தவறாக வழிநடத்தினார். தற்போது இவர் பிறரே ஜனாதிபதியை ஏமாற்றினார்கள் என குறிப்பிடுவது நகைப்புக்குரியது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு விரைவான தீர்வு காணாவிட்டால் நாட்டு மக்கள் மேலும் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதை விடுத்து அரசாங்கம் நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் செயற்படுவதைக் காண முடிகிறது.

வட்டி மற்றும் வரி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். நாட்டில் பெரும்பாலான தொழிற்துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தினால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் - என்றார்.

# பணவீக்கப் பட்டியலில் ஏறி, இறங்கும் இலங்கை

கொழும்பு, ஒக்.19

உலகில் அதிக பணவீக்கம் உள்ள நாடுகளில் இலங்கை ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. ஜோன் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழக பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹென்கேயின் சமீபத்திய அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக பணவீக்கம் உள்ள நாடாக சிம்பாப்வே கருதப்படுகிறது. அதைத் தொடர்ந்து கியூபா, வெனிசுலா, துருக்கி மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உள்ளன.

இதற்கு முன்னர் இந்தப் பட்டியலில் முதலாம், மூன்றாம் இடங்களில் இருந்த இலங்கை தற்போது 5 ஆம் இடத்தை நோக்கிச் சென்றுள்ளது.

அதேவேளை, விரைவில் இலங்கையின் பணவீக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார். (எ)

# 4 பேர் கொண்ட குடும்பத்தின் மாதாந்தச் செலவு 53,840 ரூபா

## குடிசன மதிப்பீட்டு திணைக்கள அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஒக். 19

இலங்கையில் 4 பேரைக்கொண்ட குடும்பம் ஒன்று அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மாதமொன்றுக்கு 53 ஆயிரத்து 840 ரூபா தேவைப்படுகிறது என குடிசன மதிப்பீட்டு புள்ளி விவரவியல் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிசன மதிப்பீட்டு புள்ளி விவரவியல் திணைக்களத்தால் மாதாந்தம் வெளியிடப்படும் அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதத்தில் தனிநபர் ஒருவரின் அடிப்படைத் தேவைகளுக்காக 13 ஆயிரத்து 138 ரூபாவும், ஓகஸ்ட் மாதத்தில் 13 ஆயிரத்து 460 ரூபாவும் காணப்பட்டது.

கொழும்பு மாவட்டத்தில் தனி நபர் ஒருவருக்கு மாதாந்தச் செலவாக 14 ஆயிரத்து 517 ரூபாவும், மொனராகலை மாவட்டத்தில் தனி நபர் ஒருவரின் மாதாந்த செலவாக 12 ஆயிரத்து 870 ரூபாவாகவும் காணப்படுகின்றது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரித்தாலே கட்டணக் குறைப்பு

## கூட்டு முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 19

முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை 30 லீற்றராக அதிகரித்தால் மாத்திரமே பயணிகளுக்கான கட்டணத்தை குறைக்க முடியும் என தேசிய கூட்டு முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

92 ஒக்ரேன் பெற்றோல் லீற்றருக்கு 40 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இது உராய்வு எண்ணெய், ரயர், டியூப், மின்கலம், வாகன வரிகள் ஆகியவற்றுடன் பார்க்கும்போது போதுமானதாக இல்லை.

எனவே, முச்சக்கரவண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை 30 லீற்றராக அதிகரித்தால் மாத்திரமே கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளமுடியும்.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு இதனைக் கவனத்திலெடுத்து முச்சக்கரவண்டிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டு அளவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நவராத்திரி விழா பரிசில் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 19

தெல்லிப்பழை கிட்ஸ் பார்க்கின் நவராத்திரி விழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று புதன்கிழமை மாலை 3.15 மணிக்கு முன்பள்ளி அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் இராமநாதன் சேதுநாதன் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைக்கு அடிமையானோருக்காக யாழ்.நகர் அருகே மறுவாழ்வு மையம்

## விரைவில் நடவடிக்கை என யாழ். மேயர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்.19**

**போதைக்கு அடிமையானவர்களை சமூகத்துடன் இணைப்பதற்கு யாழ்ப்பாணம் நகருக்கு அண்மையில் மறுவாழ்வு நிலையம் ஒன்றை அமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.**

பவ்ரல் அமைப்பால் நடத்தப்படும் மாற்றத்துக்கான பாதை கற்கை நெறியின் யாழ்ப்பாணம் மாவட்டப் பெண்கள் குழு நடத்தும் "போதையால் பாதை மாறும் இளையோரை நல்வழிப்படுத்தி நற்பிரஜைகளாக உருவாக்குவோம்" என்ற தொனிப் பொருளிலான போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு திருநேல்வேலி முத்துத்தம்பி இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எங்களுடைய பிரதேசம் அச்சுறுத்தலையும், ஆபத்தையும் எதிர்கொண்டுள்ளது. அண்மைய நாள்களாக வெளியாகும் தகவல்கள் கவலையையும், கலக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

போதைப் பொருள் வர்த்தகர்களின் பிரதான இலக்காக இருப்பவர்கள் பாடசாலை மாணவர்களே. பாடசாலை மாணவ, மாணவிகளை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்கப்படுவது அதிகரித்து வருகின்றது. எதிர்கால விளைவுகளை அறியாது இளைஞர், யுவதிகள் போதைப் பொருளுக்குள்ளே அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அரசியல் தலைமைகள், சமூக மட்டப் பிரதிநிதிகள், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், கல்விச் சமூகம் என அனைவரது கடமையுமாகும்.

போதைப்பொருள் பாவனைக்குள் உள்ளாகாதவாறு மாணவர்களை பாதுகாப்பது தொடர்பில் நாங்கள் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். மாநகர முதல்வர் என்ற ரீதியில் போதைப் பொருளுக்கு எதிரான செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து விசேட கூட்டம் ஒன்றை விரைவில் நடத்தவுள்ளேன்.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை சமூகத்துடன் இணைப்பதற்காக மறுவாழ்வு அளிக்கக்கூடிய விசேட நிலையம் ஒன்றை யாழ்ப்பாணம் நகருக்கு அண்மையில் அமைப்பது தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம். போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை சிறைக்கு அனுப்பும்போது அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் - என்றார். (எ-26-20)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேர்தல் இணக்கம் இல்லை

## பெரமுன கூறுகின்றது

கொழும்பு, ஒக்.19

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேர்தல் கூட்டணி தொடர்பில் இன்னும் எவ்வித இணக்கப்பாடும் ஏற்படுத்திக்கொள்ளப்படவில்லை என்று அரசாங்கத்தின் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து தேர்தலில் போட்டியிடுமா?, அதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கென கொள்கையொன்று உள்ளது. அந்தக் கொள்கையின் அடிப்படையில் எமது பயணம் தொடரும். எமது பொருளாதாரக் கொள்கையுடன் உடன்படக்கூடிய கட்சிகளுடன் இணைந்து செயற்படலாம். மாறாக காலைவார முற்படும் கட்சிகளுடன் கூட்டுப் பயணத்துக்கு இனி தயாரில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டை நிர்வகிப்பதற்கு நாம் ஆதரவு வழங்கிவருகின்றோம். அவரின் தற்போதைய நிலைப்பாடுகளை நாம் ஆதரிக்கின்றோம். பொருளாதாரக் கொள்கை தொடர்பில் வேறுபாடு உள்ளது. அதில் இணக்கம் காணப்பட்டால் இணைந்து பயணிப்பதில் சிக்கல் இருக்காது - என்றார். (எ-44)

# தனிநபர்களை இலக்கு வைக்கும் திருத்தத்துக்கு ஆதரவில்லையாம்

## சாகர காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19

தனிநபர்களை இலக்கு வைத்து முன்வைக்கப்படும் அரசமைப்பு திருத்தங்களுக்கு எமது கட்சி ஆதரவு வழங்காது. மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய புதியதொரு அரசமைப்பே நாட்டுக்குத் தேவை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனிநபர்களை இலக்கு வைத்து கொண்டுவரப்படும் அரசமைப்பு திருத்தங்களுக்கு எதிர்ப்பு என்பதை எமது கட்சி தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றது.

எமது நாட்டில் ஒரு மதக்குழு, இனம் மற்றும் நபர்களை இலக்குவைத்தே அரசமைப்பு மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இனியும் அத்தகைய நடவடிக்கை ஏற்புடையதாக இருக்காது.

ஒரு நாடாக முன்னோக்கி பயணிக்க வேண்டும். தனிநபர் மற்றும் அரசியல் கட்சிகளை இலக்கு வைத்தும், மக்களுக்கு நன்மை பயக்காத விதத்திலும் கொண்டுவரப்படும் அரசமைப்பு திருத்தங்களுக்கு எமது கட்சி இணங்காது.

ஜனாதிபதியிடமும் இந்த விடயத்தை எடுத்துரைத்துள்ளோம்.

புதியதொரு அரசமைப்பு இயற்றப்படும் என்ற உறுதிமொழியை நாட்டு மக்களுக்கு எமது கட்சி வழங்கியது. அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக, புதிய அரசமைப்புக்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு விசேட நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது. அனைத்து தரப்புகளினதும் கருத்துக்களை உள்வாங்கிய பின்னர், சட்டமூலம் தயாரிக்கப்பட்டு, அது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

தற்போதுள்ள அரசமைப்பில் திருத்தங்களை செய்துகொண்டிருக்காமல், புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்திவருகின்றோம். புதிய அரசமைப்புக்கான தேவைப்பாடே உள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைத்து, மக்கள் மத்தியில் கருத்தாடலை உருவாக்கி 6 மாதங்களுக்குள் இதற்கான பணியை நிறைவுசெய்ய முடியும்.

சிலருக்கு பஸில் ராஜபக்ச அரசியலில் இருக்கின்றமை அச்சுறுத்தலாக உள்ளது. அதனால்தான் இரட்டை குடியுரிமை உடையவர்களுக்கு தடை விதிக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றனர். பஸில் என்ற தனிநபர் இங்கு முக்கியமில்லை. போர் உட்பட பல காரணங்களால் நாட்டை விட்டு வெளியேறியவர்கள் உள்ளனர். அவ்வாறானவர்கள் நாட்டுக்காக சேவையாற்ற முன்வந்தால் அதற்கான வாய்ப்பு மறுக்கப்படும். இது ஏற்புடைய நடவடிக்கை அல்ல - என்றார். (எ-44)

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மக்களின் குரலை ஒடுக்குகிறது

## வசந்த யாப்பா பண்டார தெரிவிப்பு

பொதுமக்கள் தமது துயரைத் தெரிவிக்க வழி இன்றி பாதைக்கு இறங்கும்போது அவர்களைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைப்பதில் எந்த நியாயமும் இல்லை.

இவ்வாறு டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை உறுப்பினரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார். பேராதனையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு மேற்கொண்ட பொருளாதாரக் கொலைக்கான தண்டனையைப் பொதுமக்களே இன்று அனுபவிக்கின்றனர். வரிக்கு மேல் வரி விதிக்கப்பட்டு வற் வரி மட்டும் 17.5 வீதம் வரை மறைமுகமாகச் செலுத்தப்படுகின்றது. 'மொட்டு' அரசு பதவிக்கு வந்தபோது ஒரு திறமைமிக்கவர் ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால், 2008 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் தடைவிதித்த ஒருவரையே ஜனாதிபதி செயலாளராக நியமித்தனர். அதன் விளைவுகளை இன்று வரை அப்பாவிப் பொதுமக்கள் அனுபவித்து வருகின்றனர். அதேபோல் 'மொட்டு' அரசு ஆட்சிக்கு வந்ததும் வரிச் சலுகை வழங்கியது. அதனால் அரசுக்குச் சேர வேண்டிய வரிப்பணமான 600 ட்ரிலியன் ரூபா கிடைக்காமல்போனது. இதுவும் மாபெரும் தவறாகும். நாட்டின் பொருளாதாரத்தைக் கொலை செய்தவர்கள் சிலர், தற்போதும் அரசினுள் இருந்து கொண்டே நாட்டை நிர்வகிக்கின்றனர். கொரோனாத் தொற்றின் போது வெளிநாட்டு அன்பளிப்பாகக் கிடைத்த 800 மில்லியன் டொலர் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது. அது சென்ற இடமும் தெரியவில்லை என்றே கூறவேண்டும். இவை போன்ற காரணங்கள்தான் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்ற காரணிகளாகும். வரி அறவிடுவதில் தவறில்லை. ஆனால், பொதுமக்கள் கழுத்தை நெரித்து, கசக்கிப் பிழிந்து வரி அறவிடுவதுதான் தவறாகும். மக்களுக்குச் சகாயம் வழங்க வேண்டி அரசு மக்களைச் சிரமத்துக்கு உள்ளாக்கி வரிச்சுமையை மேலும் மேலும் அதிகரித்துச் செல்வதை அனுமதிக்க முடியாது.

சாதாரணமாக ஒரு மருத்துவர் அல்லது அலுவலகத்தில் உள்ள பரிபாலன அதிகாரி மாதம் ஒரு இலட்சதுக்கு மேல் சம்பளம் எடுக்கலாம். அவரும் வருமான வரி செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு வருமான வரி எல்லையைக் கண்மூடித்தனமாக உயர்த்துவதால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் வரி செலுத்த முடியாது தமது உற்பத்திகளைக் கைவிடுவர். வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தமது முதலீட்டைக் கைவிட்டு வெளியேறி விடுவர். இதனால் தொழிற்சாலைகள் மூடப்பட்டு பலர் தொழிலை இழக்கலாம். காரியாலயப் பரிபாலன அதிகாரிகள் தமது தொழிலைக் கைவிட்டு வெளி நாடுகளுக்குச் சென்று விடலாம். இந்த ஆபத்துக்களில் இருந்து நாட்டை மீட்க வேண்டும். நாடாளுமன்றில் தற்போது எதிர்க்கட்சிக்கு 108 ஆசனங்கள் வரை இருக்கின்றன என்று கருதுகின்றோம். காலப்போக்கில் நல்லதொரு ஆட்சியை ஏற்படுத்தக்கூடிய ஒரு குழுவை வெகுவிரைவில் ஏற்படுத்தி ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படலாம் என எதிர்பார்க்கின்றோம் -என்றார். (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் தரப்பில் அதிருப்தி உடைகின்றது பெரமுன!

**கொழும்பு, ஒக்.19**

**ஆளும் தரப்பின் சுமார் 40 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவது தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ளனர் என அறிய முடிகின்றது. 38 இராஜாங்க அமைச்சர்களில் பெரும்பாலானோர் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்பட பேச்சுக்களை மேற்கொண்டுள்ளனர்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் நிலையான அமைச்சரவையை அமைக்க வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்கள்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த பின்னரே நிலையான அமைச்சரவை உருவாக்கப்படும் என ஜனாதிபதி திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள நிலையில், அதற்கு பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

மறுபுறம் அண்மையில் நியமிக்கப்பட்ட 38 இராஜாங்க அமைச்சர்களுக்கான விடயதானங்கள் இதுவரை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடாமல் இருப்பதற்கும் ஒரு சில இராஜாங்க அமைச்சர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளார்கள்.

அமைச்சின் விடயதானங்களின் செயற்பாடுகளுக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் ஒருசில அமைச்சரவை அமைச்சர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்.

இதையடுத்து ஆளும் தரப்பின் சுமார் 40 உறுப்பினர்களுக்கும் அதிகமானோர் நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்பட அவதானம் செலுத்தியுள்ளனர் என்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சுமார் 38 பேர் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ அணியினரும், டலஸ் தலைமையிலான அணியினரும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகின்றனர். மறுபுறம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினரும் நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகிறார்கள். (எ)

## திருடிய டொலர் திரும்பினால் நாட்டின் வங்குரோத்துத் தீரும்

*எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.19

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுக்க வேண்டுமானால், ராஜபக்சக்கள் திருடிய டொலரை மீளக் கொண்டுவர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

குருநாகல் தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் மீது வரி விதிக்காது, கடந்த ஒரு தசாப்த காலமாக பல்வேறு ஒப்பந்தங்கள், நிர்மாணப் பணிகள் சார்ந்த கொந்தராத்துகள், கொடுக்கல் வாங்கல்கள் மூலம் ராஜபக்ச குடும்பத்தினரால் கொள்ளையடிக்கப்பட்ட எமது நாட்டின் செல்வத்தை மீட்டெடுத்து அதன் மூலம் அரச வருவாயை அதிகரிக்க முடியும். திருடர்களைப் பிடித்து அவர்களால் திருடப்பட்ட டொலரை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வருவதன் மூலமும் நாட்டின் வருமானத்தைப் பெருக்க முடியும். பெரும் தொகைப் பணம் இவ்வாறு நாட்டுக்கு வெளியே உள்ளது. தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு இதுவே உடனடியான ஒரே தீர்வாக அமைய முடியும்.

எதிர்க்கட்சியாக எந்தவொரு அரசியல் பழிவாங்கலையோ அல்லது தனிநபர்களை குறிவைத்த அரசியல் பழிவாங்கல்களையே அங்கீகரிக்காவிட்டாலும், எமது நாட்டிலிருந்து திருடப்பட்ட அனைத்து டொலரும் எதிர்காலத்தில் நிறுவப்படவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அரசின் கீழ் கொண்டு வரப்படும்.

அந்த அரசின் அரச வருவாயை அதிகரிக்கும் அதிகாரம் நிதி அமைச்சருக்கும், திருடர்களைப் பிடிக்கும் அமைச்சருக்கும் வழங்கப்படும். வணிகங்கள், கேள்வியும் நிரம்பலும், விநியோகம் போன்றவற்றைச் சுருக்கி தற்போதைய வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதே நடப்பு அரசின் பொருளாதாரக் கொள்கையாகும்.

தற்போது வட்டி விகிதம் கூட 30 சதவீதத்தைத் தாண்டிவிட்டது. தற்போதைய அரசு சாதாரண மக்கள் மீது வரிச்சுமையைச் சுமத்தாது கோடீஸ்வரர்கள் மீது அந்த வரிச்சுமை சுமத்தப்பட வேண்டும். ஐக்கிய அமெரிக்க குடியரசிலுள்ள சிலிக்கான் பள்ளத்தாக்கு போன்ற நகரங்கள் நம் நாட்டிலும் உருவாக்கப்பட வேண்டும்.

நாட்டின் டொலர் நெருக்கடியைத் தீர்க்க தகவல் தொழில்நுட்பத்தை நாடு முழுவதும் பரப்ப வேண்டும்- என்றார். (எ-22)

## 22ஆவது திருத்தத்தில் சிறப்பான ஏற்பாடுகள்

*ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு*



கொழும்பு, ஒக்.19

அரசமைப்பில் 20 ஆவது திருத்தத்தில் காணப்பட்ட சர்வாதிகார ஏற்பாடுகளை விட, 22 ஆவது திருத்தத்தில் சிறந்த ஏற்பாடுகள் காணப்படுகின்றன. இந்தத் திருத்தத்துக்கு நிபந்தனைகளுடன் ஆதரவளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் ஆணைக்கு அஞ்சும் அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கிறது. இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தவறுகளை திருத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் கோருகின்ற போதும் , மக்கள் அவரை மன்னிக்கத் தயாராக இல்லை.

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் வெவ்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வருகிறது. தேர்தலைக் காலம் தாழ்த்தும் உரிமை அரசாங்கத்துக்குக் கிடையாது. பொதுமக்களின் வாக்களிக்கும் உரிமை அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு முரணாக எவராலும் செயற்பட முடியாது. எதிர்வரும் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் நிச்சயம் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்று மக்கள் ஊடாக அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்பதற்காக கையெழுத்துப் பெறும் செயற்றிட்டத்தை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கவுள்ளோம்.

நாடளாவிய ரீதியில் கையெழுத்தைச் சேகரித்து அதைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளோம். அதன் பின்னரும் தேர்தல் நடத்தப்படாவிட்டால் அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம். சர்வதேசத்தை நாடவும் தயாராகவுள்ளோம். மக்களின் ஆணைக்கு அஞ்சியே அரசாங்கம் இவ்வாறு செயற்படுகிறது- என்றார். (எ)

## மாளிகைக்குள் நுழைந்தவருக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஒக்.19

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த மேலும் ஒருவருக்கு கொழும்பு கோட்டை நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேகநபரை காசுப் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 49 பேருக்கு இதுவரை நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது. (எ)

# வரி அதிகரிப்பு விடயத்தை அரசியலாக்க வேண்டாம்!

*ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள்*

கொழும்பு, ஒக்.19

தேசிய வருமான வரி அதிகரிப்பின் மூலம் நாட்டில் நூற்றுக்கு 5 வீதமானவர்களுக்கே தாக்கம் ஏற்படும்.

அதனால் மத்தியவரிசை மக்களைப் பாதுகாத்துக்கொண்டு நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி உட்பட அரசாங்கம் எடுத்திருக்கும் இந்த நடவடிக்கையை யாரும் அரசியலாக்கவேண்டாம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி கோட்டே தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி தினேஷ் விதான பத்திரண தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேசிய வருமான வரி திருத்தச் சட்டவரைவின் ஊடாக வெளிப்படையான வரியை அதிகரித்து நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

மாத வருமானமாக ஒருஇலட்சம் ரூபா முதல் அதற்கு அதிகமாக பெறுபவர்களிடமிருந்து நூற்றுக்கு 6 முதல் 36 வீதம் வரை பல்வேறு நிபந்தனைகளுக்கு கீழ் வரி அறவிடுவதற்கே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

இந்த வரி அதிகரிப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

நாட்டின் வருமானத்தை அதிகரிக்காமல் கடன் செலுத்துவதும், நிவாரணங்களை வழங்குவதும் முடியாத காரியம். அதனால் தான் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விலைக்குறைப்புக்களின் அரசியல்

விலைவாசி உச்சம் பெற்று மக்கள் அந்தரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அண்மைய நாள்களாக விலைக்குறைப்புக்கள் தொடர்பான அறிவிப்புக்கள் அரசாங்கத்திடம் இருந்து வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. மா விலைக்குறைப்பு, எரிபொருள் விலைக்குறைப்பு, அத்தியாசியப் பொருள்களின் விலைக் குறைப்பு என்று நாளாந்தம் ஏதோவொரு 'குறைப்புத்' தகவல் அரசாங்கத் தரப்பில் இருந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றது.

ஆயினும், எரிபொருளைத் தவிர வேறெந்தப் பொருளும் அரசாங்கம் அறிவிப்பதைப் போன்று இறங்கியதாகத் தகவல்கள் இல்லை. பொருளாதார நெருக்கடி அதியுச்ச நிலையில் இருந்த போது, எரிபொருள் விலை ஏறிய அடுத்த கணமே போக்குவரத்துக்கட்டணமும் ஏறியது, மா விலை கூடியவுடன் பேக்கரி உற்பத்திகளின் விலையும் உயர்ந்தது. இப்படி விலையேறுகையில் இருந்த ஏட்டிக்குப்போட்டி நிலை, விலைகள் குறைக்கப்படுவதாகச் சொல்லப்படும் காலத்தில் இல்லாமலே போய்விட்டது. எரிபொருள் விலை, மா விலை என்பன இறங்கினாலும் போக்குவரத்துக் கட்டணமோ, பேக்கரி உற்பத்திப் பொருள்களோ 'விலை இறங்கவேமாட்டோம்' என அடம் பிடிக்கின்றன. அதேவேளை, அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றபோதும், பொதுமக்களுக்கு அதன் பயன் சரிவரப் போய்ச்சேரவில்லை.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில் – இறக்குமதிக்கான அந்நியச் செலவாணி வங்குரோத்து நிலையிலேயே இருக்கின்றது. சர்வதேச உதவிகள் தொடர்பாக அரசாங்கம் அறிவிப்புக்களை வெளியிடுகின்ற போதும், அவை எவையும் இதுவரை இலங்கையின் கைகளுக்குக் கிட்டவில்லை என்பதே உண்மை நிலைவரம். அவ்வாறிருக்க, ஐரோப்பாவில்கூட எரிபொருள்களின் விலைகள் எகிறிக்கொண்டிருக்கும் சமயத்தில், இலங்கையில் மட்டும் இந்த விலைக்குறைப்புக்கள் எவ்வாறு சாத்தியமாயிற்று? இதன் பின்னால் இருக்கும் மர்மம் என்ன? என்ற கேள்விகள் மக்களுக்கு எழவே செய்கின்றன. இந்தக் கேள்விகளுக்கான விடைகள் ஒருவேளை தென்னிலங்கை அரசியலில் நடந்துகொண்டிருக்கும் பரமபத ஆட்டத்தில் ஒளிந்திருக்கவும் கூடும்.

கொழும்பு அரசியலில் ஒரு பரபரப்பு நிலை தொற்றிக் கொண்டிருக்கின்றது. மக்களின் கொந்தளிப்பால் ஒதுங்கியிருந்தவர்கள் மெல்லமெல்ல மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்திருக்கும் நிலையில், எதிர்காலக் கூட்டுக்கள் தொடர்பான சந்திப்புக்களும் நடந்துகொண்டிருக்கின்றன. அரசியல் கட்சிகள் அடுத்த தேர்தல் ஒன்றுக்கான தயார்ப்படுத்தல்களில் இறங்கியுள்ளன.

மக்களின் எதிர்ப்பால் பதவிகளை விட்டோடிய ராஜபக்சக்களும், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதிகாரத்துக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவும் இப்போது தேர்தல் கூட்டணி தொடர்பான பேச்சுக்களில் இறங்கியுள்ளனர். அவ்வாறு தேர்தல் ஒன்று வருமாயின், அதற்கு முன்னரே தங்கள் மீதுள்ள மக்கள் அதிருப்தியைப் போக்கிவிட வேண்டுமென்ற நோக்கில் ராஜபக்சக்களும், ரணில் தரப்பும் சில 'மறக்கடிப்பு' வேலைகளைத் தொடங்கியிருக்கிறார்கள். இலங்கையின் பொருளாதார நிலைக்கு சற்றும் சம்பந்தமில்லாத வகையில் வெளியாகிக் கொண்டிருக்கும் 'விலைக்குறைப்பு' அறிவிப்புக்களும் அத்தகைய மக்களை மறதி மாயைக்குள் வீழ்த்தும் கவனக்கலைப்பான்களோ என்றும் ஐயுறவேண்டியுள்ளது.


ஆட்சியிலிருந்தவர்கள் கடந்த காலங்களில் உண்மை நிலைமைகளை மறைத்து மக்களை மாய உலகில் வைத்திருந்ததன் காரணமாகவே நாடு இப்போது பெரும் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. இப்போது வாழ்வா? சாவா? என்ற நிலைமையில் நாடும், மக்களும் தவித்துக் கொண்டிருக்கும் நிலையிலும் அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் எதிர்காலத்துக்காக நாட்டையும், மக்களையும் அடகு வைக்கத் தயாராகின்றனர். ஆனால், அதன்மூலம் ஏற்படும் விளைவுகளை மீண்டும் மக்களே தலையில் சுமக்க நேரிடும்.

குறுகியகாலச் சலுகைகள் மூலம் தாம் நினைத்ததைச் சாதித்துவிடலாம் என்ற அரசியல்வாதிகளின் சிந்தனையே நாட்டைக் குட்டிச் சுவராக்கியிருக்கின்றது. இப்போதும் அவர்கள் அதையே முயற்சிக்கின்றனர். கடந்த அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மக்கள் போராட்டம் நீர்த்துப் போனமை அந்த நம்பிக்கையை ஆட்சியாளர்களுக்கு வழங்கியிருக்கலாம். குறுகியகாலச் சலுகைகள் மூலம் மக்களை ஏமாற்றிவிட முடியும் என்ற அரசியல்வாதிகளின் நம்பிக்கை சிதையும்வரையில் நாட்டுக்கு விமோசனம் கிடைப்பது குதிரைக் கொம்பே. அந்தநிலைமை ஏற்படவேண்டுமானால் மக்களின் சிந்தனையோட்டத்திலும், செயற்பாடுகளிலும் மாற்றம் ஒன்று ஏற்படவேண்டும். அந்த மாற்றம் எப்போது ஏற்படும் என்பதுதான் எம்முன் இப்போதுள்ள கேள்வி.

நாளொரு நல்வார்த்தை

"மலர்களுக்கு சூரியஒளி எப்படியோ அதுபோல மனித நேயத்துக்கு புன்னகை"

- ஜோசப் அடிசன்




# நாடாளுமன்றத்தை உடனே கலைக்கும் திட்டம் இல்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.19**

**நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஆளும் கட்சியின் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அரசமைப்பின் 20 ஆம் திருத்தச் சட்டத்தில் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான காலம் இரண்டரை வருடங்களாக குறைக்கப்பட்டுள்ளது என்று சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர்.

அரசமைப்பின் 19 ஆம் திருத்தச் சட்டம் இதனை நான்கரை வருடங்களாக அதிகரித்திருந்தது என்றும், அது தொடர்பாக 22 ஆம் திருத்தச்சட்டத்தில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வினவியுள்ளனர்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டுமாயின் அதை நானே மேற்கொள்ள வேண்டும். அதற்கான எந்தவித தயார் நிலையும் தற்போதைய நிலையில் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது அரசமைப்பின் 22 ஆம் திருத்தச்சட்ட வரைவு தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது. பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த திருத்தச் சட்ட வரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் வெளிநாடுகளின் உதவிகளை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் 22 ஆம் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

# வரி அதிகரிக்கப்பட்டதால் மூடப்படும் அரிசி ஆலை!

கொழும்பு, ஒக்.19

தென் மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகள் அடங்கலாக 50 அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளன என்று சிவப்பு அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்கத்தால் அண்மையில் சமூக பாதுகாப்பு ஒத்துழைப்பு வரி அதிகரிக்கப்பட்டது. அதனால் அரிசி கிலோ ஒன்றுக்கு 5 ரூபா வரி அறவிடப்படுகின்றது என்று அந்தச் சங்கத்தின் செயலாளர் நிமல் சிறி தெரிவித்துள்ளார். இந்த வரி அதிகரிப்பால் கடும் இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ள அவர், உரிய தீர்வு அரசாங்கத்தால் பெற்றுக் கொடுக்கப்படாவிட்டால் அரிசி ஆலைகள் தொடர்ந்தும் மூடப்படலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ)

நாளை 20.10.2022 வியாழக்கிழமை ஐப்பசி 3

சுபநேரம் : 07.32 – 09.02
ராகுகாலம்: 01.32 – 03.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

தூரத்தில் உருவாகியுள்ள மேலடுக்கு சுழற்சியானது நாளை தாழமுக்கமாக மாறும் வாய்ப்புள்ளதால் வடமாகாணத்துக்கு நேற்று இரவு முதல் மழைக்குச் சாத்தியமுள்ளது என்று யாழ். பல்கலைக் கழக புவியியல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில்,

இந்தத் தாழமுக்கம் மேலும் விருத்தியடைந்து எதிர்வரும் சனி அல்லது ஞாயிறு அளவில் நடுத்தர அளவிலான புயலாக மாறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இது புயலாக மாறினால் வடக்கு, வடகிழக்கு திசை நோக்கியே (இந்தியாவின் ஒடிஸா அல்லது மேற்கு வங்கம்) நகரும் வாய்ப்புள்ளது. இதன் காரணமாக இன்று (நேற்று) இரவு முதல் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்தோடு வெப்பச் சலன செயற்பாடும் காணப்படுகிறது. எனவே கடுமையான இடிமின்னல் நிகழ்வுகளுக்கும் வாய்ப்புண்டு - என்றுள்ளது. (அ-ம)

## பாதுகாப்புத்...

ரணில் அரசாங்கத்தில் அடுத்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டவரைவு முதலாம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டது. இதில் உள்ளூராட்சித்துறை, தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு அடுத்ததாக பாதுகாப்புக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்துகிடக்கின்ற நிலையில், அடுத்த வருட அரச செலவினத்தில் பாதுகாப்புத் துறைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்பது பெரும் விவாதப்பொருளாக இருந்த நிலையில் சுமார் 54 ஆயிரம் கோடி ரூபா அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளமை பல்வேறுபட்ட விமர்சனங்களை பல தரப்பினரிடத்திலும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை- 2023 ஆம் ஆண்டுக்கான மொத்த செலவினமாக 3 லட்சத்து 65 ஆயிரத்து 726 கோடியே 56 லட்சத்து 38 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் அதி கூடிய ஒதுக்கீடாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 85 ஆயிரத்து 625 கோடியே 40 லட்சம் ரூபாவும் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு 61 ஆயிரத்து 393 கோடியே 70 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் பாதுகாப்புக்கு 53 ஆயிரத்து 920 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு 794 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-ம-22)

## உள்ளூராட்சித்...

சஜித் பிரேமதாஸ எழுப்பிய விசேட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக பல்வேறு இடங்களில் கதைக்கப்படுகின்றன. காலம் தாழ்த்தாது குறித்த காலத்தில் உள்ளூராட்சித்தேர்தல்நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? இல்லையா? என்பதை உறுதியாக கூறமுடியுமா? அவ்வாறு இல்லையெனில் அரசாங்கம் தேர்தலுக்கு பயப்படுகின்றது என்றே கருதுகின்றோம் என்று சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார். இதற்குப் பதிலளிக்கையிலேயே சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார். (அ-ம)

## யாழ்....

யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நடைபெறும் பண்பாட்டுப் பெருவிழாவில், வடக்குமாகாண பிரதமர் செயலர் சமன் பந்துலசேன, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் மு.வரதீஸ்வரன், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். கலைஞர்களை கௌரவப்படுத்தும் விதமாக யாழ். முத்து விருது வழங்கும் வைபவமும் விழாவில் இடம் பெறவுள்ளது. (அ-ம-125)


## திருக்கேதீச்சர ஆலயம் - மன்னார்
## முகாமையாளர்
## மடப்பள்ளி ஐயர் தேவை

மேற்படி ஆலயத்திற்கு ஆசார சீலராகவும் நிர்வாகத் திறமை வாய்ந்தவரும் ஆலய நடைமுறைகளில் பரீட்சையமாகவுள்ள முகாமையாளர் ஒருவரும், பிராமணகுல மடப்பள்ளி ஐயர் ஒருவரும் தேவை. தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விடுதி வசதிகள் மற்றும் அவசியமான அனைத்து வசதிகளும் செய்து தரப்படுவதுடன் தகுதிக்கு ஏற்பகொடுப்பனவும் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரங்கள் மற்றும் அனுபவங்களை நீங்களாகவே தயார் செய்து **இணைச் செயலாளர், திருக் கேதீச்சர ஆலயம், திருக்கேதீர்ச்சரம்.** என்ற முகவரிக்கு நேரிலோ அன்றேல் பதிவுத் தபால் மூலமோ **31.10.2022** ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**

**071 867 1113, 077 751 5003**
**077 775 1290, 076 603 4900**

ஆகிய எண்களுடன் தொடர்பு கொள்ளமுடியும்.

**திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை**

(CS 47201)(3/6)



## Angel International School
**Manipay (Tel: 021 225 5628)**

New Batch has been started and admissions available for the **"Basic English Training Course - Fulltime"** from Thursday, 20th October 2022.

**Course Duration: 6 months**
**Minimum Qualification: 3 passes in G.C.E. (A/L)**

Call us for more information.

**- School Administration**

## ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை
**மானிப்பாய் (தொ.பே.: 021 225 5628)**

**"Basic English Training Course - Fulltime"** இற்கான புதிய பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வியாழக்கிழமை. 20.10.2022 இல் இருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

**காலம்: 6 மாதங்கள்**
**கல்வித் தகைமை: க.பொ.த. உயர் தரத்தில் 3 S சித்திகள்**

மேலதிக விபரங்களிற்கு எம்மைத் தொடர்புகொள்ளவும்.

(CS 38315) (3/6) **- பாடசாலை நிர்வாகம்**


## மரண அறிவித்தல்

### பத்மநாதன் பாஸ்க்கரகுமார்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய். ஒஸ்கா லேன் என்னும் இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் பாஸ்க்கரகுமார் நேற்று (18.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2022) புதன்கிழமை நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 06 . 08 . 1967



**மறைவு** 18 . 10 . 2022

### தேவதாஸ் அருமைத்துரை (மகான்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாஸ் அருமைத்துரை (மகான்) அவர்கள் நேற்று (18.10.2022) காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை **நாளை (20.10.2022) வியாழக்கிழமை மு.ப. 10.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. கோண்டாவில் கட்டையாலடி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராசபாதை வீதி,**
**கல்வியங்காடு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 18 . 02 . 1951



**மறைவு** 18 . 10 . 2022

### திருமதி கலாவதி பூலோகசிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, பகுதித்தலைவர், யாழ். இந்து மகளிர் கல்லூரி)**

சிவன்பண்ணை வீதி. வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கு. ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி பூலோகசிங்கம் அவர்கள் நேற்று (18.10.2022) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமநாதன்- இராசமணி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற இளையதம்பி - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும். பூலோகசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும். பிரியங்கா (U.K). பிரணவன் ஆகியோரின் அன்புத் தாயாரும். துஷ்யந்தனின் (U.K) அன்பு மாமியும். கவிஷ். சிருஷ்ரி. சஷ்ரி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும். திலகவதி. ரவீந்திரன் (அரச உணவு களஞ்சியம்). காலஞ்சென்ற தினகரன். ரூபாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியர். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை). கருணாவதி. நந்தாவதி (ஜேர்மனி). சுவேந்திரன் (ஸ்ரீ). தயாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற அமரசிங்கம். நகுலேஸ்வரி (சாவகச்சேரி). இராஜேஸ்வரி (ஜேர்மனி). காலஞ்சென்ற கிருஷ்ணபாலா (ஓய்வுபெற்ற ஆசிரியர். புனித பத்திரிசியார் கல்லூரி). குலநாயகம் (தபால் உத்தியோகத்தர்). இராஜசிறி (மீசாலை). காலஞ்சென்ற சத்தியநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும். காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (திடீர் மரண விசாரணை அதிகாரி. நிறைவேற்று உத்தியோகத்தர். இங்கினியாகல. கல்ஓயா). காலஞ்சென்ற பாலசிங்கம் (இலங்கை மத்திய வங்கி பிரதிப் பணிப்பாளர். வங்கி மேற்பார்வையாளர்). காலஞ்சென்ற விநாயகலிங்கம் (ஸ்ரீமுருகன் கபே மல்லாகம்). செல்வராணி (U.K) ஆகியோரின் அன்பு மைத்துனியும். ஜெகதாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை. விசாலாட்சி வித்தியாலயம். மல்லாகம்). கௌரிதேவி (அமெரிக்கா). வசந்தாதேவி (நல்லூர்). காலஞ்சென்ற விஜயநேசன் (பொறியியலாளர். பொஸ்வானா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.10.2022 வியாழக்கிழமை பிற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. ஏழாலை உசத்தி ஓடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 21292) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்." -வள்ளுவர்



## கரைச்சி பிரதேசசபையின் ஏற்பாட்டில்





# கண்களுக்கு விருந்தாக பண்பாட்டுப் பெருவிழா!



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளைப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா கடந்த வாரம் கிளிநொச்சி - கரைச்சிப் பிரதேசசபையின் ஏற்பாட்டில், தமிழர்களின் கலைகள், கலாசாரங்கள், பண்பாடுகள், விழுமியங்கள் ததும்பும்படியாக - கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் கோலாகலமாக இடம்பெற்றது.

கிளிநொச்சி நகர பிள்ளையார் ஆலய முன்றிலில் இருந்து தமிழர்களின் வரலாற்றையும், வாழ்வியலையும் பறைசாற்றும் வகையிலான பண்பாட்டுப் பேரணியுடன் விழா இனிதே ஆரம்பமானது. பொம்மலாட்டம், வீரப்பறை, சிலம்பம், காவடி, கரகம், தவில், நாதஸ்வரம் என்பவற்றுடன் இணைந்தாற்போல் பாரம்பரிய இன்னிய வரவேற்புடன் பேரணி மெய்ச்சும்படியாக அமைந்தது. இவற்றைவிட, தமிழ் மன்னர்களின் பிரதி உருவச்சிலை பவனி காண்போரைக் கவர்ந்திழுத்ததுடன் தமிழர் வரலாற்றை அடுத்த சந்ததியினருக்குக் கடத்தும் வகையிலும் அமைந்தது.

மட்டக்களப்பு இராவணேசன் கூத்துருவ அளிக்கை, தேசிய விருது வென்ற மண்குளித்து நாடக ஆற்றுகை பாகம் 02', யாழ். குமரன் குழுவினரின் 'நாதஸ்வர சங்கமம்', கவியரங்கம், மலையக மண் வாசனை தாங்கிய 'காமன் கூத்து' அளிக்கை, நடன ஆற்றுகை என்பன அரங்கில் கலைச் சங்கமமாகக் கட்டியம் செய்தன. அத்துடன் கிளிநொச்சி மண்ணுக்கும், தமிழுக்கும் மகத்தான சேவையாற்றியவர்கள் பண்பாட்டுப் பெருவிழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

கரைச்சிப் பிரதேசசபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இந்தப் பண்பாட்டுப் பெருவிழா நடைபெற்றது. நிகழ்வின் முதன்மை அதிதியாக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்துகொண்டிருந்ததோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேசசெயலகங்களின் பிரதேசசெயலர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் பெருவிழாவுக்கு அணிசேர்த்தனர்.





உண்மையில் இத்தகைய பண்பாட்டுப் பெருவிழாக்களானவை ஒரு குறிப்பிட்ட பிரதேசசெயலகத்துக்கோ அல்லது மாவட்டத்துக்கோ உரியவை அல்ல. அவற்றின் செயற்பாட்டுத்தளம் இந்த வரையறையைத் தாண்டிச் செல்லவேண்டும். தமிழினத்தின் கலாசார, பண்பாட்டு, விழுமிய மற்றும் வரலாற்று அழிப்புகள் தற்போது தீவிரம் பெற்றுள்ள சூழ்நிலையில் இத்தகைய பண்பாட்டுப் பெருவிழாக்களை தமிழர் தாயகமெங்கும் வரலாற்றுக் கடத்திகளாக நடத்த வேண்டிய பொறுப்பு அனைவரையும் சார்ந்ததாகும். அதற்குரிய ஓர் அத்திபாரமும் சான்றுமே கரைச்சிப் பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பெருவிழா என்றால் அது மிகையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காண்போர் மெய்சிலிர்க்கும்படி அருவியின் ஓர் அரங்கேற்றம்!



மிகவும் விமரிசையாகவும் பார்வையாளர்களின் மனங்களைக் கவரும்படியாகவும் லண்டனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று முடிந்துள்ளது சென்னை அடையாறு கலாக்ஷேத்திரா பட்டதாரியும், நாட்டிய விதூஷகி ஸ்ரீமதி பிரஷாந்தி உதயபாபுவின் மாணவரான நாட்டிய கலாஜோதி அருவி ஜெயகாந்தனின் அரங்கேற்றம்.

கலாக்ஷேத்ரா பாணியில் அனைத்து நிருத்த அங்கசுத்தங்களுடனும் பார்ப்பவர்கள் மெய்சிலிர்க்கும்படியாக லண்டனிலுள்ள கனகதுர்க்கை அம்மன் மீது ஆசிரியர் ஸ்ரீமதி பிரஷாந்தியால் எழுத்துருவாக்கம் செய்யப்பட்ட அழகிய வர்ண உருப்படி, மாமேதை காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி ஐயாவால் இசையமைக்கப்பட்டு அதனை கேட்டவர், பார்த்தவர் கண்களில் புளகாங்கித கண்ணீர் வரவைத்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. நர்த்தகி அருவி தனது







பாவத்தை உண்மையில் அருவியாக பொங்கவைத்தார் என்று கூறுவதில் சற்றும் பிழையில்லை. அரங்கேற்ற உருப்படிகளான புஷ்பாஞ்சலி ராகம் மலயமாருதம், ஜதீஸ்வரம் ராகம் பைரவி வர்ணம், ராகம் கல்யாணி இந்த உருப்படிகள் வணக்கத்துக்குரிய மாமேதை காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி ஐயாவால் இசையமைக்கப்பட்டு குருவாகிய ஸ்ரீமதி பிரஷாந்தியால் நடன அமைப்பு செய்யப்பட்டது இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

அனைத்துக்கும் மேலாக அரங்கேற்ற நாயகி அருவியின் அருமையான நிருத்தம், நிருத்தியத்தினை நடனத்தில் அர்ப்பணித்த விதம் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. மிகவும் தெளிவாக தீர்க்கமான முறையில் அவர் அரங்கை அதிரவைத்த திறமை அருவியினதும் அவர் குருவினதும் கடின உழைப்பின் பிரதிபலிப்பே ஆகும்.

அரங்கேற்றத்தின் அணியிசை கலைஞர்களாக இசைவழங்கியவர் ஸ்ரீமதி திலகசக்தி ஆராமுதன், மிருதங்கம் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி ஐயா, நட்டுவாங்கம் ஸ்ரீமதி பிரஷாந்தி உதயபாபு, வயலின். ஏ.ஜி.ஏ.ஞானசுந்தரம், புல்லாங்குழல் பிச்சையப்பா ஞானவரோதயன் ஆகியோர் கலந்துகொண்டு அணி சேர்த்தனர்.

மொத்தத்தில் அருவியின் அரங்கேற்றமும் அதன் பின்னரான பலரின் உழைப்பும், பல ஜாம்பவான்களின் பாராட்டுக்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றது என்பதில் மகிழ்ச்சி.








கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2022ஆம் ஆண்டுக்கான இலக்கியப் போட்டித்தொடரில் பங்குபற்றி வெற்றிபெற்ற ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலய மாணவர்கள் மூன்று பேர் தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். எம்.ஆர். இன்ஸமாம், யு.ஹிஸாம், எம்.எச்.பாத்திமா சப்னம் ஆகிய மாணவர்களே தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.





கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் கடந்த ஞாயிறன்று பு.கணேசராசாவின் 'பொறுப்பது உன் விதியோ?' நாடக நூல் வெளியீடும், 'காதலுக்கு மருந்து' நாடக ஆற்றுகையும் இடம்பெற்றன. (ம)

# பலரையும் கவர்ந்த பனை ஓலை அழைப்பிதழ்!





முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவுக்கான அழைப்பிதழ்கள் இம்முறை பனையோலையில் தயாரிக்கப்பட்டமையானது பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் துணுக்காய் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் 'பண்பாட்டுப் பெருவிழா' துணுக்காய் பிரதேச செயலகத்தில் நேற்றுக் கோலாகலமாக நடைபெற்றது. இந்தப் பெருவிழாவுக்கான அழைப்பிதழே பாரம்பரியத்தைப் பின்பற்றி பனையோலை சுவடியில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சிக்குப் பலரும் தமது வாழ்த்தையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். சமூக வலைத்தளத்திலும் இந்த முயற்சி பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது. (ம-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவு அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 22.09.2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த ஏமது குடும்ப குல விளக்கு

## அமரர் முத்துராஜா கோகுலன் (கோபி)

அவர்களின் அந்தியேட்டிகிரியைகள் நாளை (20.10.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தகரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (22.10.2022) சனிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத் தளங்கள் ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.11, குளாவளை வைரவர் கோவிலடி, கன்னாகம்.

குடும்பத்தினர்
077 935 7122

# இசைத்துறையில்

# தேசிய விருதுகளைப் பெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பு





தேசிய மட்டத்தில் இசைத்துறைக்கான விருதுகளைப் பெற்ற வவுனியா கானாம்ருத கலாலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ப.சத்தியநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. ஆண்கள் பிரிவு மிருதங்கம், தனியிசைப் போட்டியில் சாதித்த நந்தகுமார் சேயோன், சத்தியசீலன் மௌலி, துஸ்யந்தன் மௌலீசன் ஆகியோரும் பெண்கள் பிரிவு வயலின் தனி இசைப்போட்டியில் சாதித்த யதுசனா செல்வகுமார், வித்தகி நித்தியானந்தன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். (ய-110)

# வாசிப்பே சுவாசிப்பு

ராணி சீதரன்



தெருவோரத்தில் நிழல் பரப்பி நிற்கும் பெரிய ஆலமரம் அந்தப் பாடசாலைக்குக் குடை பிடித்து நிற்பதைப் போன்று தனது கிளைகளை விசாலப்படுத்தியதால் குளிர்மை அங்கு நிரந்தரமாகக் குடிகொண்டுவிட்டது. அந்த இடம் வழிப்போக்கருக்கும், பாடசாலைக்கும் ஆறுதல் தரும் ஓர் இடமாக மாறியிருந்தது.

காலைக்கூட்டம் முடிந்து முதலாம் பாடத்துக்கான மணி அடித்தது. 11ஏ பிரிவு மாணவர்கள் வகுப்பறைக்குப் போவதில் விருப்பமில்லாது அங்குமிங்குமாக நின்றிருந்தனர். வகுப்பாசிரியர் சாந்தி ரீச்சரின் தமிழ்ப் பாடம் முதலாம் பாடமாக இருந்தது.

11ஏ வகுப்பில் உள்ள 25 மாணவர்கள் வடிகட்டப்பட்டவர்கள். திறமையானவர்கள் வடித்து எடுத்து 11பி வகுப்புக்குத் தெரிவாகிவிட, இவர்கள் தேறாதவர்கள் என்ற முத்திரையுடன் 11ஏ வகுப்புக்கு அனுப்பப்பட்டவர்கள். இவர்களை மாற்றிவிடுவதற்கு சாந்தி ரீச்சரும் படாத பாடு பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் அவர்களை மாற்றுவதற்குப் பதிலாக ரீச்சர் வருத்தக்காரியாக மாறிவிடுவாரோ என்றுதான் எண்ண வேண்டியிருந்தது. ஆனாலும் அவர் தன்னால் இயன்றதைச் செய்து அவர்களை எப்படியாவது முன்னேற்றி விட வேண்டும் என்று முயன்று கொண்டிருந்தார்.

வகுப்பறையில் கன்னத்தில் கை வைத்தபடி சாந்தி ரீச்சர் காத்திருந்தார். ஆனால் மாணவர்கள் இன்னமும் முழுமையாக வகுப்புக்கு வந்து சேரவில்லை. அதற்குள் வகுப்பில் இருந்த கோபிக்கும், மேனனுக்கும் பஞ்சாயத்து ஆரம்பித்து விட்டது. பட்டப் பெயரைக் கூறி விட்டான் என்று மேனனின் தலையில் கோபி அடிக்க, மேனன் திருப்பி கோபியை அடிக்க அந்த இடம் சலசலத்துக் கொண்டிருந்தது.

வகுப்பறையில் இருந்த சாந்தி ரீச்சர் அனைத்தையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். வகுப்பறையில் இத்தனை களேபரத்திலும் ரீச்சரின் மௌனம் தொடர்ந்ததால், வகுப்பில் இருந்தவர்கள் ஏதோ வித்தியாசத்தை உணர்ந்தார்கள் போலும், மெல்ல மெல்ல மாணவர்களின் அட்டகாசம் குறைந்து வகுப்பறை நிசப்தமானது.

சாந்தி ரீச்சர் எதுவும் நடக்காதது போன்று வகுப்பை ஆரம்பித்தார்.

"பிள்ளைகள் இன்று ஒக்ரோபர் முதலாம் திகதி. வாசிப்பு மாதம் இது. வாசிப்பு மனிதனை பூரணத்துவம் உடையவனாக மாற்றுகின்றது. புத்தகம் இல்லாத அறைகள் உயிரில்லாத உடல்கள் என்று ஒரு அறிஞர் கூறியமை முற்றிலும் உண்மை. இந்த மாதம் முழுவதும் வாசிப்பில் ஈடுபடுவோம். வாசிப்புப் போட்டி வைத்து பரிசுகள் தரப் போகின்றேன்." – என்றார் சாந்தி ரீச்சர்.

"சரி பிள்ளைகள் புத்தகங்களை வாசிப்பதால் என்ன பயன் கிடைக்கும்? சொல்லுங்கோ பார்க்கலாம்" என்று கேட்ட சாந்தி ரீச்சர் மாணவர்களை ஒவ்வொருவராகப் பார்த்தார்.

"கதைகள், வரலாறுகளைப் படிக்கலாம்" "செய்திகளை அறியலாம்" என்று மாணவர்களிடம் இருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பதில்கள் வந்தன.

மாணவர்களைப் பார்த்த சாந்தி ரீச்சர், "பிள்ளைகள் வாசிப்பதால் அறிவு வளர்ச்சியடைகின்றது. அனுபவங்களைப் பரிமாறுகின்றோம். கற்பனைத் திறன் வளர்கின்றது. மனம் அமைதியடையும். கவனச் சிதறல் ஏற்படாது.

இப்போது தொழில்நுட்ப யுகத்தில் வாழும் நாம் "கைபேசி" மூலம் அனைத்தையும் பெற்றுவிட முடியும் என்று நினைத்து வாசிப்பைக் கைவிட்டுவிட்டோம். இலகுவாகப் பெறமுடியும் என்றாலும் நாம் பல இழப்புக்களை எம்மையறியாமல் ஏற்கின்றோம்.


வாசிப்புப் பழக்கம் கைவிட்டுப் போயுள்ளதால் கண், மூளை, நரம்புகள் செயலிழக்கின்றன.

எமது முன்னோர்கள் முதுமையிலும் புலன்களின் செயற்பாட்டுடனும், ஞாபகசக்தியுடனும் இருந்தார்கள். அதற்கு வாசிப்புப் பழக்கமே முக்கிய காரணமாக இருந்திருக்கின்றது" என்று சொல்லி முடித்தார்.

சாந்தி ரீச்சர் அழுத்தம் திருத்தமாகக் கூறியமை, மாணவர்கள் மனங்களிலும் ஏதோ மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது போலும், ஆமோதிப்பது போன்று அவர்களும் அமைதியாக இருந்தார்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புக்கர் வென்ற இலங்கையர்



இந்த ஆண்டு புக்கர் பரிசை வென்ற முதலாவது இலங்கை எழுத்தாளராக மாறியுள்ளார் ஷெஹான் கருணாதிலக. 47 வயதான ஷெஹான் கருணாதிலக தனது இரண்டாவது நாவலான 'தி செவன் மூன்ஸ் ஒஃப் மாலி அல்மேடா' வுக்காக இந்த விருதை வென்றார். இலங்கை உள்நாட்டுப் போரின் பின்னணியில் ஒரு புகைப்படக் கலைஞரின் ஆன்மாவின் கதையைச் சொல்லும் நாவல் இது. 2010இல் வெளியான 'சீனாமேன்: தி லெஜண்ட் ஒஃப் பிரதீப் மேத்யூ' ஷெஹானின் முதல் நாவல் ஆகும்.

50,000 பவுண்டு பெறுமதியான பரிசுத்தொகையைக் கொண்ட, 'புக்கர்' பரிசு என்பது இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தில் வெளியிடப்படும் ஆங்கில நாவல்களுக்கு வழங்கப்படும் விருது ஆகும். இம்முறை 6 பேர் இறுதிச் சுற்றுக்கு வந்துள்ளனர்.

1990 இலங்கை உள்நாட்டுப் போரின் பின்னணியில் கருணாதிலகவின் கதை விரிகிறது. இந்த நாவல், மாலி என்ற புகைப்படக்கலைஞர் தன் அன்பானவர்களை மீண்டும் சென்றடைவதற்காக மேற்கொள்ளும், காலத்துக்கு எதிரான போராட்டத்தையும் இலங்கையில் நடந்த போரின் கொடூரத்தையும் சித்தரிக்கும் வகையில் அமைந்துள்ளது.


1989 இல் நடந்ததாக அமைந்துள்ள இந்தக்கதையில் ஒரு போர்ப்புகைப்படக் கலைஞர் கொல்லப்படுகிறார். அவ்வாறு கொல்லப்பட்டவர் தனது சாவுக்குப் பின்னர், அதற்கான காரணத்தைக் கண்டறிய ஆவியாக மேற்கொள்ளும் முயற்சிகளையும் அதன் போது எழும் சிக்கல்களையும், துரோகங்களையும், அவலங்களையும், தீர்வுகளையும் இருண்மையான நகைச்சுவைப்பாங்கோடு நாவல் சொல்கின்றது.

ஷெஹான் கருணாதிலக இலங்கையின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். நாவல்களைத் தவிர, அவர் ராக் பாடல்கள், திரைக்கதைகள் மற்றும் பயணக் கதைகளையும் எழுதியுள்ளார்.

ஷெஹான் கருணாதிலக 2011 இல் உலக இலக்கிய அரங்கில் தோன்றினார், அவர் கொமன்வெல்த் புத்தக பரிசு, DSL மற்றும் கிரேஷியன் பரிசு என்பவற்றை 'சீனாமேன்: தி லெஜண்ட் ஒஃப் பிரதீப் மேத்யூ' என்ற தனது முதல் நாவலுக்கு வென்றார் . இந்தப் புத்தகம் எல்லாக் காலத்திலும் இரண்டாவது சிறந்த கிரிக்கெட் புத்தகமாக விஸ்டன் சஞ்சிகையால் அறிவிக்கப்பட்டது. இது 1980 களில் காணாமல் போன இலங்கை கிரிக்கெட் வீரரைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு குடிகார பத்திரிகையாளரின் தேடலின் கதையைச் சொல்கிறது.

1975 ஆம் ஆண்டு இலங்கையின் காலியில் பிறந்த கருணாதிலக கொழும்பில் வளர்ந்து நியூசிலாந்தில் படித்து லண்டன், ஆம்ஸ்டர்டாம் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இடங்களில் வாழ்ந்து பணிபுரிந்துள்ளார். தற்போது இலங்கையில் வசிக்கிறார். அவரது பாடல்கள், வசனங்கள் மற்றும் கதைகள் ரோலிங் ஸ்டோன், நஷனல் ஜியோகிராஃபிக் ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளன. அவர் விளம்பர நகல் எழுத்தாளராக பணிபுரிந்தார் மற்றும் இன்டிபென்டன்ட் ஸ்கொயர் என்ற இசைக்குழுவில் கிட்டார் கலைஞராகவும் உள்ளார்.

கருணாதிலகவின் முதல் கையெழுத்துப் பிரதியான 'தி பெயிண்டர்' 2000 ஆம் ஆண்டில் கிரேஷியன் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது, ஆனால் அது வெளியிடப்படவில்லை.



## புதன்பொய்கைக்கு எழுதுங்கள்

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கவிதைகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு.

உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளையும் புகைப்படங்களுடன் அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :
புதன்பொய்கை, உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி :
puthanpoigai@gmail.com



## மனிதம் தவழும் பிரபஞ்சம்

– பிரபஞ்சன் –

வள்ளுவனின் வாழ்வு நெறி
ஒளவையின் நீதி நெறி
இளங்கோவின் சூட்சி நெறி
வள்ளலாரின் அன்பு நெறி
புத்தரின் புனித நெறி
இயேசுவின் பணிவு நெறி
நபியாரின் தோழமை நெறி
காந்தியாரின் கர்ம நெறி
தழைத்தோங்கும் பிரபஞ்சமே
மனிதம் தவழும் பிரபஞ்சமாக
மலர்மீது மணம் வீசும்

### நீத்தார் நயப்புரை

பா.துவாரகன்

# சிவஸ்ரீ ஸ்ரீசண்முகானந்தக் குருக்கள்

## முத்துமாரி அம்பாளின் தெய்வீகத்தைப் பெற்றவர்


திருமேவும் ஈழவளநாட்டில் யாழ்ப்பாணத்தின் வடபால் ஏழு ஆலயங்கள் சூழ அமைந்த ஏழாலைக் கிராமத்தில், சூராவத்தை என்னும் சிற்றூரிலே நூறு வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்பையும் தாயென அண்டிவந்த அடியார்களுக்கு தன் அருளை வாரி வழங்கும் முத்துமாரி அம்பாள் கோயில் கொண்டு வீற்றிருக்கின்றாள்.

சூராவத்தை முத்துமாரி அம்பாளுக்கு சிறுவயது முதலே நித்தியபூசைகள் செய்து அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்றவரான சிவஸ்ரீ ஸ்ரீசண்முகானந்தக் குருக்கள் ஐயா, இந்த ஆண்டு 2022 ஆடி மாதம் அம்பாளுக்கு மகோற்சவப் பெருவிழாவை தெய்வீகமும் அருளும் பெருக உவமையில்லாச் சிறப்புடன் ஆற்றினார். அடியார்களை முத்துமாரி அம்பிகையின் அருளின்பால் ஒழுகச் செய்து அம்பாளின் மகோற்சவப் பெருவிழா நினைவு எம்மை விட்டு நீங்காது இருக்கச் செய்தார். அந்நாள்களை இனி எப்போது மீண்டும் காண்போம்?

மஹோற்சவப் பெருவிழாவின்போது சூராவத்தை முத்துமாரியின் தெய்வீக அருட்பொலிவை கொடித்தம்பத்திலே நட்சத்திரங்கள் மின்னும் பேரழகை இம்முறை போன்று எங்குமே காண்கிலோம்! முத்துமாரி அம்பிகையின் மஹோற்சவம் நிறைவுற்று இருவாரங்கள் சென்றன. சூராவத்தை முத்துமாரி அம்பாளதும், அயலில் உள்ள சுன்னாகம் கிழக்கு சொர்ணவரத பத்திரகாளி அம்பாளதும் அடியார்கள் மீளாத் துயரில் ஆழ, 2022ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28ஆம் நாள் சிவஸ்ரீ ஸ்ரீசண்முகானந்தக் குருக்கள் அம்பிகையின் அருட்பாதங்களைச் சென்றடைந்தார்.

சிவஸ்ரீ ஸ்ரீசண்முகானந்தக் குருக்கள் அவர்தம் தந்தையார் சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்களே 1982ஆம் ஆண்டு முதன்முதலில் சூராவத்தை முத்துமாரி அம்பாளுக்கு மஹோற்சவப் பெருவிழாவை நிறைவேற்றிய பெருந்தகை.

சிவஸ்ரீ ஸ்ரீசண்முகானந்தக் குருக்கள் 1998 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் சூராவத்தை முத்துமாரி அம்பாளுக்கு மகாகும்பாபிஷேகத்தை பிரதம சிவாச்சாரியாராக இருந்து நிறைவேற்றியவர். சூராவத்தை முத்துமாரி அம்பாளுக்கு 30 ஆண்டுகளுக்கு மேலாக மஹோற்சவப் பெருவிழாவை ஆகம முறைப்படி செய்து அம்பாளின் அருள் பெருகச் செய்த சிறப்புக்கும் வணக்கத்துக்குமுரிய அந்தண சிவாச்சாரியார்.



அம்பிகையின் முகத்தில் மலர்ந்திருக்கும் அருளும் அழகும் ஸ்ரீசண்முகானந்தக் குருக்கள் தோடணிந்த திருவதனத்திலும் எப்போதும் கொலுவிருக்கும். ஐயாவுடைய திருவதனத்தைப் பார்த்தால் அம்பாளைப் பார்த்தது போல் இருக்கும்.

ஸ்ரீசண்முகானந்தக் குருக்கள் அம்பிகையைத் துதித்த அந்தணப் பெருந்தகை. கருணையும் கனிவும் மிக்கவர். மெய்ம்மை குன்றா மென்மையான மொழிகளையே எப்போதும் உச்சரிப்பார். அந்தணர்க்குரிய ஒழுக்கத்திலே நிலைத்து நின்ற சான்றோன். பல தசாப்தங்களாக அனைவருக்கும் செந்தண்மை பூண்டு ஒழுகி, சுன்னாகம் மயிலணிப் பதியில் வாழ்ந்த, அந்தணகுல திலகத்தை, சிவஸ்ரீ ஸ்ரீசண்முகானந்தக் குருக்கள் ஐயாவை இனி எப்போது காண்போம்?

**'உன்போற் கண்கண்ட தெய்வ முளதோ..... சகல கலாவல்லியே'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மக்களும் நரகத்தில் ஆட்சியாளர்கள் சொர்க்கத்தில்

## முன்னாள் எம்.பி. ஞானமுத்து ஸ்ரீநேசன் ஆதங்கம்



**கொழும்பு, ஒக். 19**

**நாடு வங்குரோத்து அடைந்தாலும் ஆட்சியாளர்கள் செழிப்பாகவே வாழ்கின்றார்கள். மக்கள் நரகலோகத்திலும் ஆட்சியாளர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் சொர்க்கலோகத்திலும் வாழும் நிலை போன்று தற்போதைய நிலை தெரிகின்றது - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஒவ்வொரு நாட்டினதும் அபிவிருத்திக்கு அத்திபாரமாக இருப்பவை தேசியஐக்கியம், மனிதஉரிமை, பொருளாதாரம், அந்த நாடு பற்றிய நன்மதிப்பு போன்றவையாகும். ஆனால், துரதிஷ்டவசமாக இந்த நேரிடையான நியமங்கள் இலங்கையில் எதிர்மறையாக்கப்பட்டுள்ளன.

கடன் பொறியில் வீழ்ந்துள்ள, நமது நாட்டுக்குக் கடன் வழங்க உலக நாடுகள் பின்னிற்கின்றன. பணவீக்கம், பொருள்களின் விலையேற்றத்தால் மக்கள் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. இருந்தும் இனவாத, மதவாத ஆட்சியாளர்கள் அரசியல் இலாபத்துக்காக அடிப்படைவாதத்தையே தமது முதலீடாகப் பயன்படுத்தி அரசியல் வியாபாரம் செய்து வருகின்றனர்.

நாடும் மக்களும் வங்குரோத்து அடைந்தாலும் ஆட்சியாளர்கள் செழிப்பாகவே வாழ்கின்றார்கள். மக்கள் நரகலோகத்திலும் ஆட்சியாளர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் சொர்க்கலோகத்திலும் வாழும் நிலை போன்றே தற்போதைய நிலை தெரிகின்றது.

தமிழ், முஸ்லிம் மக்களைப் பாரபட்சமாக நடத்திய சிங்கள ஆட்சியாளர்கள் கடைசியாக சிங்கள மக்களையும் ஏமாற்றமடையச் செய்துள்ளார்கள். இதனால் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களையே சிங்கள மக்கள் வீடுகளுக்கு அனுப்பிவிட்டனர். இப்படியான பெரும் தீங்குகள் ஏற்பட்ட போதும் இந்த நாட்டில் இனவாதமும், மதவாதமும் ஓயவில்லை. இப்போது பெரும் கடன் பொறியில் நாடு விழுந்துள்ளது.

கண்கெட்ட பின்னரும்கூட ஆட்சியாளர்கள் சூரியவணக்கம் செய்யத் தயாராக இல்லை. அதாவது தாம் இழைத்த தவறுகளை திருத்திக் கொள்ளவே இல்லை. தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் முன்வரவில்லை. இந்த மனப்பாங்கு தான் நாட்டை பாதாளத்தில் தள்ளியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினை என்ற முடிச்சு நியாயமாக அவிழ்க்கப்பட்டால், ஏனைய முடிச்சுகள் யாவும் இலகுவாக அவிழ்ந்துவிடும் என்பதே உண்மை. இதை உணர்ந்தால் நாட்டுக்கு நன்மை கிடைக்கும். மக்களின் பிரச்சினைகளும் தீர வாய்ப்புள்ளது - என்றுள்ளது. (ம-14,22)

## சமூகப் புற்றுநோயான ஊழல் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்

### முன்னாள் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.19

சமூகப் புற்றுநோயாக பரவிவருகின்ற இலஞ்சம் மற்றும் ஊழலை முற்றாக ஒழிக்க அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டுமென முன்னாள் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவர் டில்றுக்சி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் முன்னெடுக்கப்பட்ட 'சுபீட்சமான நாட்டுக்கான பாதை நல்லிணக்கமே' எனும் தொனிப்பொருளிலான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலஞ்சம், ஊழல் என்பவை தற்போது புற்றுநோய்போல் பரவி இன்றைக்கு மிகப்பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. இந்த ஊழலானது நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றுக்குத் தடையாக இருப்பது வருத்தமளிக்கிறது. ஊழல் என்பது திருட்டு. இதனை ஊழல்வாதிகள் உணரவேண்டும்.

லஞ்சம் கொடுத்துக் காரியங்களை மேற்கொள்ள நினைக்கும் மக்களும் தாம் திருட்டுத்தொழிலுக்கு உடந்தையாக இருக்கிறோம் என்பதை உணரவேண்டும். ஊழல் புரிந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தமையால் ஆட்சி மாற்றம் நிலவியுள்ளது. எனவே சமூகத்தில் புற்றுநோயாகப் பரவிவருகின்ற ஊழலை ஒழிக்க உடனடியாக அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும் - என்றார். (ச-125)



சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு, 'யப்னா யாழ். ஒரியன்ட்' லயன்ஸ் கழகத்தால், கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வளநிலையத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை வெள்ளைப் பிரம்புகள் கையளிக்கப்பட்டன. (ய)

# தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொண்டால் நடவடிக்கை

## எரிசக்தி அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.19

பெற்றோலிய தொழிற்சங்கங்கள் பணிப் புறக்கணிப்புக்களில் ஈடுபட்டு இடையூறு ஏற்படுத்தினால் சட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர எச்சரித்துள்ளார்.

தனது ருவிற்றர் பக்கத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:

கடந்த ஆறு மாதங்களாக பெற்றோலிய சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு ஊழியர் அல்லது தொழிற்சங்கம் அத்தியாவசிய சேவை விதிமுறைகளை மீறுவது மற்றும் சேவைகளுக்கு இடையூறு விளைவிப்பது கண்டறியப்பட்டால், அவர்கள் மீது உடனடியாக சட்ட மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது.

அதேவேளை, பெற்றோலிய சிறப்பு ஏற்பாடுகள் திருத்தச் சட்டத்துக்கு எதிராகத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என்று தொழிற்சங்கங்கள் அச்சுறுத்தியுள்ளன. (எ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முன்னோரை வழிபட நன்மை நடக்கும். அரசு வழியிலான முயற்சி நிறைவேறும். உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். குடும்பத்தில் ஒருவரின் தேவையை நிறைவேற்றுவீர்.

**இடபம்:** :நேற்றைய முயற்சி இன்று நிறைவேறும். இழுபறியான வழக்கு சாதகமாகும். முயற்சியில் இருந்து வந்த தடை விலகும். கொடுக்கல் வாங்கல் சீராகும்,

**மிதுனம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். மனதில் குழப்பம் ஏற்படும்.

**கடகம்:** உறவினர் ஒருவரால் சங்கடம் தோன்றி மறையும். வீட்டுக்கான செலவு அதிகரிக்கும். குடும்பத்திலுள்ள ஒருவரால் சிறு பிரச்சினை தோன்றும்.

**சிம்மம்:** உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழிலில் ஆதாயம் ஏற்படும். தடைப்பட்டிருந்த செயல் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறை முன்னேற்றத்தை உண்டாக்கும் நாள். பணிபுரியும் இடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். உங்கள் மதிப்பு உயரும்.

**துலாம்:** உங்கள் அணுகுமுறையால் பிரச்சினைக்குத் தீர்வு உண்டாகும். ஒரு சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு அமையும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.

**விருச்சிகம்:** பழைய பிரச்சினை ஒன்று மீண்டும் தலையெடுக்கும். மனதில் குழப்பம் தோன்றி மறையும். ஆவலுடன் எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும். வீண் அலைச்சலும் செலவும் உண்டாகும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். நண்பர்களால் ஆதாயம் அடைவீர்கள். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** வியாபாரத்தில் இருந்த நெருக்கடி விலகும். மறைமுகத் தொல்லை அகலும். வழக்கு ஒன்று உங்களுக்கு சாதகமாகும். தொழிலில் விரோதிகள் விலகிச் செல்வர்.

**கும்பம்:** பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். பொன், பொருள் சேர்க்கை உண்டு. உறவினர்களால் ஏற்பட்ட தொல்லை விலகும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும். நீங்கள் விரும்பிய ஒன்றை போராடி அடைவீர்கள். பணியிடத்தில் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். அமைதி காப்பது நன்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10 . 07 . 1962

மறைவு 17 . 10 . 2022

எமது திணைக்களத்தில் கடற்றொழில் அலுவலராகக் கடமையாற்றும் **திரு.கிருஷ்ணன் அகிலன் அவர்களின் பாசமிகு தாயார்**

### திருமதி கிருஷ்ணன் தவம்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உதவிப் பணிப்பாளரும், பணியாளர்களும்.**

**கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம், மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.**

(CS 21269) 1/5

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்



### அப்பாக்குட்டி இரத்தினகுமார்

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி இரத்தினகுமார் நேற்று (18.10.2022) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தட்டான்குளம், மீசாலை வடக்கு, புத்தூர் சந்தி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 21251) 1/6

## கூட்டுறவுப் பணியாளருக்கு முற்கூட்டிய கொடுப்பனவு!

யாழ்ப்பாணம், ஒக். 19

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு குடாநாட்டிலுள்ள அநேக கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு இந்த மாதத்துக்கான சம்பளக் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை முன்கூட்டியே வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

குறிப்பாக இந்த வாரத்தின் இறுதியில் சம்பளக் கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் இதர கொடுப்பனவுகளை வழங்க அவை தீர்மானித்துள்ளன என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(அ-ம-17)

## பகிரங்க விலை மனு கோரல்

UNHCR யாழ்ப்பாண அலுவலகத்தில் பாவித்த அலுவலக கென்ரைனர் (1) களஞ்சிய கென்ரைனர் (1) வாகன ரயர்கள் மற்றும் இதரபொருட்களுக்கு பகிரங்க விலை மனு பின்வரும் நிபந்தனைகளுடன் கோரப்பட்டுள்ளது.

- ஐப்பசி மாதம் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை இலக்கம் 386, நாவலர் வீதியில் உள்ள அலுவலகத்தில் பார்வையிடலாம்.
- அலுவலக மற்றும் களஞ்சிய கென்ரைனர்கள் சிறு துண்டுகளாக்கி மாத்திரமே அகற்ற முடியும்.
- பொருட்களினை அகற்றும் போது அலுவலக சொத்துக்கு ஏதும் சேதம் ஏற்படின் அதனை முழுமையாக சீர்செய்து தரல் வேண்டும்.
- விலை மனுவில் அதி கூடியதொகை கோரியவருக்கு பொருட்கள் வழங்கப்படும். அத்துடன் விலைமனு தொகை மூன்று நாட்களுக்குள் UNHCR வங்கி கணக்கில் வைப்பிடலிடப்பட வேண்டும்.
- பணம் செலுத்தி மூன்று நாட்களில் (09.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை) விலை மனு கோரப்பட்ட அனைத்து பொருட்களும் அகற்றப்படவேண்டும்.

**UNHCR அலுவலகம் யாழ்ப்பாணம்.**

(CS 47187) (3/6)

'ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ'

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 10 . 1936



மறைவு 18 . 10 . 2022

### திருமதி சர்வேஸ்வரி மாணிக்கவாசகர்

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சர்வேஸ்வரி மாணிக்கவாசகர் அவர்கள் நேற்று (18.10.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசாமி பரிமளம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் அவர்களின் அன்பு மனைவியும், அமரர் நகுலேஸ்வரி, பஞ்சாட்சரம், சந்திரவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி, விஸ்வரத்தினம் மற்றும் கமலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், லோகதர்மினி (மணி, இலங்கை), லோகேஸ்வரன் (பிரான்ஸ்), ராதாகிருஷ்ணன்(கனடா), துரை(சுவிஸ்), ஐங்கரன்(குட்டி-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வனேஸ்வரன், விக்னேஸ்வரி, கீதாலட்சுமி, புஸ்கலா, சுகன்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், அனிதா, சரண்யா, குமணன், சாருஜன், சினேகா, தசிகா, துசிகா, பௌசிகா, கஜீவன், நிருஷன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2022) புதன்கிழமை பி.ப 01:00 மணியளவில் நடைபெற்று பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**வீட்டு முகவரி:**
**இல. 68/1,**
**சொர்ணவடலி லேன்,**
**கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**

**தொடர்புகளுக்கு**

| | |
|---|---|
| **மணி - மகள்** | Mobile : +94778234131 |
| **லோகேஸ்வரன் - மகன்** | Mobile : +33651621856 |
| **துரை - மகன்** | Mobile : +41767730361 |
| **ராதா - மகன்** | Mobile : +15149282481 |
| **குட்டி - மகன்** | Mobile : +33662943183 |

(CS 21290) 1-6

## மரண அறிவித்தல்



### சிற்றம்பலம் சரவணபவன்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சரவணபவன் நேற்று (18.10.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிற்றம்பலம் பராசக்தி ஆகியோரின் அன்பு மகனும், தில்லைநாதன் மாசிலாமணி ஆகியோரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முருகவேள், முத்துக்குமாரசாமி, சிவக்கொழுந்து, பகவதி, பாண்டிமாதேவி மற்றும் மாதினி, மீனாட்சிசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தநாயகி, வசந்தநாயகி, ஜெயநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2022) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**இராஜேஸ்வரி - மனைவி**
**[illegible] - மைத்துனர்**
**[illegible]**

## மரண அறிவித்தல்

அன்னையின் மடியில் 07 . 12 . 1940



ஆண்டவன் அடியில் 18 . 10 . 2022

### திருமதி கனகரத்தினம் அருள்மலர்

தெல்லிப்பளை துர்க்காபுரம் ராமகிரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினத்தின் மனைவி அருள்மலர் நேற்று (18.10.2022) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற இராஜசிங்கம் மனோன்மணி தம்பதியரின் ஏக புதல்வியும், புத்தூரைச் சேர்ந்த காலஞ்சென்ற காசிநாதர் சரஸ்வதி பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிரியதர்சினி (U.K), மற்றும் உதயதர்சினி, ஸ்ரீராகவன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகநாதன் (U.K), குகபாலன், ரிஷா (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராஜமனோகரன், நித்தியானந்தன், Dr.தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அநுஜன், பிரவின், சஸ்வின், சசிக்கா, சிவான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (21.10.2022) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொலைபேசி இல:**
**021 205 9271**
**[illegible]9884**
**[illegible]8528531**

**தகவல்:**
**கணவர் - கா.கனகரத்தினம்**
**(ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர் இலங்கை வங்கி)**

(CS 21286) 1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவபூமி நிலையம்
## கொழும்பு
## Sivpoomi Colombo Center
## திறப்புவிழா அழைப்பு

**காலம்**

**20.10.2022 வியாழக்கிழமை**
**முற்பகல் 10.00 மணி தொடக்கம்**
**12.00 மணி வரை**

**தலைவர்**

**செஞ்சொற் செல்வர்**
**கலாநிதி ஆறு. திருமுருகன்**
(தலைவர் – சிவபூமி அறக்கட்டளை)

அன்புடையீர்!

எமது சிவபூமி அறக்கட்டளையின் ஆன்மீக சமூகப் பணிகளைத் தலைநகர் கொழும்பிலும் ஆற்ற இறையருள் கைகூடியுள்ளது. கொழும்பு பம்பலப்பிட்டி ஹக் வீதியிலுள்ள 34 ஆவது இலக்க கட்டடத்தை **திருமதி திரவியம் சபாரட்ணம் அம்மையார்** அவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

**கொழும்பு சிவபூமி நிலையத் திறப்பு விழா வைபவத்தில் தாங்கள் கலந்து சிறப்பித்து ஆசீர்வதிக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**சிவபூமி அறக்கட்டளை இலங்கை.**
**021 222 7938**
Sivapoomi@gmail.com
**இல.34, ஹக் வீதி, பம்பலப்பிட்டி.**
**No. 34, Haig Road, Bambalapitiya,Colombo - 4**

(CS 47202) (3/6)



# பத்தாம் ஆண்டு நினைவேந்தல்



தோற்றம் 14.01.1975 — மறைவு 09.10.2012

## அமரர் கோசலவதனி கனகரத்தினம்

**திதி : அபரபட்ச நவமி**

தச ஆண்டாய் எம்மை
தவிக்கவிட்டு எங்குற்றீர்! அக்கா....
தாய்போல் எம்மை தாங்கிய சகோதரியே!
தரணியிலே நாம் தவியாய் தவிக்கின்றோம்!
தினந்தோறும் உன்தன் நினைவலைகள் - எம்மை
திணறடிக்க வைக்கிறது..... அக்கா!
தினம்புலரும் போது உன்தன் நிழல் - எம்மை
திகைப்புடனே வழி நடத்துகிறது
அக்கா உன் அறிவுரைகள் கேட்க
ஆவலுடன் காத்திருக்கின்றோம்.

**சங்கரப்பிள்ளை வீதி,**
**ஆனைக்கோட்டை.** **குடும்பத்தினர்**



## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் ரவுண் பிரபல்யமான புத்தகசாலைக்கு விற்பனையாளர் காசாளர் உடனடியாகத் தேவை.

(CS 47175) (3/6)

**072 287 5625, 076 711 5374**



## JOB OPPORTUNITIY

**FIELD MANAGER**

We, one of the leading insurance company, are looking for dedicated and hardworking individuals to join us!

Requirements.

- You should pass the G.C.E. (O/L) and (A/L) examination
- Good Communication skill
- Minimum of one year experience

Candidates with necessary minimum requirements should kindly forward a comprehensive CV along with the Contact details of two - nonrelated referees to

info@lankavacancies.com

(CS 21267) (3/6) **071 058 1200, 077 567 2100**



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 01 - 11 - 1934 — உதிர்வு 20 - 09 - 2022



## அமரர் பொன்னம்பலம் கனகரத்தினம்
(ஓய்வூதியர் லக்ஸ்சல)

ஒரு திங்கள் ஓடிவிட்ட போதும்
ஓயவில்லை எங்கள் துயரம்
காலங்கள் கடந்தாலும் கரையாது
உங்கள் நினைவுகள்

எங்களின் குடும்பத்தலைவர் நோயுற்று வைத்தியசாலையில் இருந்தவேளை அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள். தாதிமார்கள். ஏனைய உத்தியோகத்தர்களிற்கும். அன்னாரின் மரணச் செய்திகேட்டு துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி மற்றும் சமூக வலைத் தளங்கள் மூலமாகவும் ஆறுதல் கூறியதோடு பல்வேறு வழிகளில் எமக்கு உதவி புரிந்த உற்றார். உறவினர், நண்பர்கள். அயலவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல.53, சங்கரப்பிள்ளை வீதி,**
**மானிப்பாய்.** **குடும்பத்தினர்**

(CS 47204) (3/6)



# மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 09 - 1961 — மறைவு 17 - 10 - 2022



## அமரர் கோவிந்தபிள்ளை தங்கவேலு

குரும்பைகட்டி புலோலி தென்மேற்கினைப் பிறப்பிடமாகவும், காந்தியூர் புலோலி தென்மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை தங்கவேலு அவர்கள் நேற்றுமுன்தினம் (17.10.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மற்றும் சிங்காரவடிவேலு பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பூபதி அவர்களின் அன்புக் கணவரும். காலஞ்சென்றவர்களான தங்கராசா. மாணிக்கவாசகம் மற்றும் கனகம்மா, பாலசுப்பிரமணியம். காலஞ்சென்ற மகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும். அரவிந்தரூபன் (லண்டன்). அரவிந்தராம் (கிராம உத்தியோகத்தர்). கஸ்தூரி (ஜேர்மனி). அனுசாந் (லண்டன்). அருணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். தக்ஷா (லண்டன்). நவராணி (பிரதேச செயலகம் மருதங்கேணி). ஆகியோரின் அன்பு மாமனாரும். தஷ்விகா. அபினேஷ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2022) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் காந்தியூர் புலோலி தென்மேற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்திகை கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 171 9761, 077 407 1026 (CR 78316) (3/6) தகவல் : **குடும்பத்தினர்**


### மர்மமான...

மேசன் வேலையில் ஈடுபட்டுவந்த விஜயபாகு நிதர்ஷன் (வயது-27) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு உறக்கத்துக்குச் சென்ற அவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் சில தினங்களுக்கு முன்னர் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவந்துள்ளார் என்று தெரிவித்த கோப்பாய் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மரண விசாரணையை வலிகாமம் கிழக்கு திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

### கோண்டாவில்...

அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியும் கூட்டாக நிராகரித்தன.

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான குறித்த 11 ஏக்கர் நிலமானது தற்போது எத்தகைய பயன்பாட்டுக்கும் உட்படுத்தப் படாத நிலையிலேயே உள்ளது. இவ்வாறான நிலையில் இங்கு சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைக்க முதல்வர் முன்னெடுப்புக்களை மேற்கொண்டார். எனினும் அவருடைய திட்டத்தை மாநகர சபையின் நேற்றைய அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஈழ மக்கள் ஜன நாயக கட்சியும் கூட்டாக நிராகரித்தன. (ம)

### பேருந்து...

சேர்ந்த 74 வயதான முதியவரே உயிரிழந்தவராவார். மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் சாரதியும் நடத்துநரும் நேற்று முன்னிரவு வரையில் தலைமறைவாகியிருந்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய பேருந்து பொலிஸாரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மன்னார் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-56)

### 21 வயது...

சிங்கம் பிரமிளா (வயது - 21) என்ற யுவதியே இவ்வாறு கொல்லப்பட்டவராவார். குறித்த யுவதி வீட்டிலிருந்து வெளியே வந்தபோது அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்றும், சம்பவ இடத்திலேயே யுவதி உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ள நெடுங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றுமுன்னிரவு வரையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணமோ அல்லது சந்தேகநபர்கள் தொடர்பான விவரங்களோ வெளியிடப்படவில்லை. (ம-18-22)

### நல்லிணக்கத்தை...

பகுதிகளில் மோதல்களின் பின்னர் மீள் குடியமர்த்துவதற்காகவும், காணி மற்றும் காணாமற் போனோர் பற்றி மக்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


குறித்த அமைச்சரவையின் அங்கத்தவர்களாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களைத் தவிர இதில் மேலும் இரு தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகளை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 - 08 - 1945



இறப்பு 18 - 10 - 2022

## நாகமணி துரைசிங்கம் (ஆச்சாரியார்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமணி துரைசிங்கம் அவர்கள் நேற்று (18.10.2022) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - பொன்னம்மா தம்பதிகளின் தவப் புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவராணியின் பாசமிகு கணவரும், திருமதி இராசரத்தினம் வியாழம்மா, திருமதி விஜயதுங்கா குணநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கருணாநிதி, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தகுமாரி, சசிகலா ஆகியோரின் மாமனாரும், நிரோஜா, ரேணுகா, நிரோசன், டிலக்சன், லோஜிதா, விதுசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக மு/ புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒட்டிசுட்டான் வீதி,
1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
076 323 4007, 076 684 6982

தகவல் :
கந்தையா நல்லநாதன்
மற்றும் குடும்பத்தினர்.

(CS 21283) (3/6)

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023

மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ் மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ் மாவட்ட செயலகம், மற்றும் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2023ம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வடபிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல: 42), மற்றும் பிரதேச செயலகங்களில் 2022-10-20ந் திகதி தொடக்கம் 2022-11-29ந் திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது www.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022-11-30ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023" எனக் குறிப்பிட்டு "அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா 500/- இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டையை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் 2022-11-30ந் திகதிக்கு முன்னர் கிடைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம். |
|---|---|
| ரூபா 2,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000க்கு அதிகமானதும் ரூபா 5,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000க்கு அதிகமானதும் ரூபா 10,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 5,000 |

தலைவர்
திணைக்கள பெறுகைக்குழு
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(CR 38314) (3/6)

# மரண அறிவித்தல்



## திரு. சுப்பிரமணியம் பொன்னம்பலம்

(முன்னை நாள் புகையிரத திணைக்கள உத்தியோகத்தர் அநுராதபுரம்)

மாரிதோட்டம் தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் பொன்னம்பலம் கடந்த (16.10.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - திரவியம் தம்பதி களின் அன்பு மகனும், நவமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான வல்லிபுரம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மரு மகனும், கமலாதேவி, சுந்தரலிங்கம், நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சினி (மருந்தாளர் -யாழ். போதனா வைத்திய சாலை), தர்மினி (லண்டன்), நயாளினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - நல்லூர்), தட்சாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயகரன் (மருந்தாளர், யாழ். போதனா வைத்திய சாலை), சுசீலன் (லண்டன்), ஜெயதர்சன் (தேர்தல்கள் அலுவலகம் - யாழ்ப்பாணம்), நிரஞ்ஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யாஹரினி (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சஹாரன் (லண்டன்), பிரதின், பிரஜன், பிரஷான் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2022) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு குமரகோட்டத்தில் அவரது இல்லத்தில் இடம் பெற்று இணுவில் காரைகால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 21281) (3/6)

தோற்றம்
21-03-1943

மறைவு
16-10-2022

குமரகோட்டம்
கோண்டாவில்.

077 759 7561
077 351 6591

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிறுவுநர்நினைவும்பரிசளிப்புவிழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 19
சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (எ-14)

### கத்தியால்...

யிடப்பட்டுள்ளது. இந்த பாதகச்செயல் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவரே இந்த நாசகார செயலைப் புரிந்துள்ளனர். முதியவரிடம் இருந்து 15 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125)

### புக்கர்...

'தி செவன் மூன்ஸ் ஒப் மாலி அல்மெய்டா' (Seven moons of Mali Almeida) என்ற நாவலுக்கே அவருக்கு புக்கர் விருது கிடைத்துள்ளது. பிரிட்டன் மன்னர் மூன்றாம் சாள்ஸின் மனைவி கமிலா பார்க்கர் இந்த விருதை வழங்கினார். இதன் மூலம் புக்கர் விருதைவென்ற இலங்கையர் என்ற பெருமையை ஷெஹான் பெற்றுள்ளார். ஏற்கனவே இலங்கையில் பிறந்தவரான மைக்கேல் ஒண்டச்சி என்பவர் 30 வருடங்களுக்கு முன்னர் புக்கர் விருதை வென்றிருந்த போதிலும் அவர் கனேடியராகவே கருதப்பட்டார். நிகழ்வில் உரையாற்றிய ஷெஹான் கருணாதிலக்க மும்மொழிகளிலும் உரையாற்றினார். அந்த வகையில், விருதுமேடையில் நேற்றுத் தமிழும் ஒலித்தது. ஷெஹான் கருணாதிலக்க தனது உரையின் இறுதி வரிகளில் 'இலங்கை சொந்தங்களே, நாம் எமது கதைகளைக் கூறுவோம். கூறிக்கொண்டே இருப்போம்' எனத் தமிழில் கூறி முடித்தார். அதற்கு முன்னர் சிங்களத்தில் சில வரிகளை அவர் தனது உரையில் சேர்த்திருந்தார். அவரது நன்றியுரை ஆங்கிலத்தில் அமைந்திருந்தது. (அ-எ)

### எரிபொருள்...

வர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
மன்னார் பிரதான பாலத்தடியில் ஒன்று சேர்ந்த மீனவர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணியிலும் போராட்டத்திலும் ஈடுபட்டதுடன், மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் மனுவொன்றையும் கையளித்தனர்.
மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் மண்ணெண்ணெயின் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. பத்து நாள்களுக்கு ஒருதடவையே எரிபொருள் எமக்கு வழங்கப்படுகின்றது. அதிலும் மிகக் குறைந்தளவு எரிபொருளே வழங்கப்படுகின்றது. மீன்பிடித் தொழில்துறையின் தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு மீனவர்களுக்கு கூடுதலான எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (அ-ம-213-56-60)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்

**077 8147 389**
**077 9865 457**

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்
04.10.1935

இறைவன் அடியில்
17.10.2022

## கதிரவேலு தியாகராசா (காரைநகர்)

(ஓட்டோ அச்சக ஸ்தாபகர்)

காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட ஓட்டோ அச்சக உரிமையாளர் கதிரவேலு தியாகராசா அவர்கள் கடந்த (17.10.2022) திங்கட்கிழமை கொழும்பில் அவரின் இல்லத்தில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சுந்தரம் தம்பதி களின் புதல்வனும், காலஞ்சென்ற மகரகம செல்லத்துரை பரிமளம் தம்பதிகளின் மருமகனும், சிவபாக்கியத்தின் கணவரும், தயாநிதியின் தந்தையும், நந்தினியின் மாமனாரும், கோகுலன், கீத்தனா ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்றவர்களான பார்வதி, பாக்கியம், விசாலாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவஞானம், சிவமணி, சிவபாதசுந்தரம், சிவகுருநாதன், சிவானந்தன், சிவகலை, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பாலசிங்கம் மற்றும் ராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கந்தசாமி உமாதேவி தம்பதிகளின் சம்மந்தியும், சதாசிவம், ஏகாம்பரம் (மூர்த்தி), பேரின்பநாதன், இந்திராதேவி, பாக்கியநாதன், பற்பநாதன், சத்தியநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (19.10.2022) புதன்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 8.00 மணியிலிருந்து 4.00 மணிவரைக்கும் வைக்கப்பட்டு நாளை (20.10.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைகள் பொரளை இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. தயாநிதி (மகன்)

இல. 11, மேபீல்ட் வீதி,
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.
இல. 122, சென்றல் ரோட், கொழும்பு - 12.
தொலைபேசி: 011-2430141, 0777-485097, 077-4585123

(CS21278) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

# கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**சில வருடகாலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்று முதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.**

- பான்ஸிப் பொருட்கள்
- பை (Bag) வகைகள்
- மாபிள் வகைகள்
- பாதணி வகைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- குடை, மழைக்கவசங்கள்
- தையல் உபகரணங்கள்
- பாடசாலை பொருட்கள்
- கவரிங் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- சில்வர் பொருட்கள்
- கிளாஸ் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- முகக் கவசங்கள் (Mask)
- மணிக்கூடுகள்

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

**சரவணபவன் பான்ஸி ஹவுஸ்**
**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன் (செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்:- தே.கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354


அமெரிக்க லொத்தர் இலவச விசா
ஏமாற்றங்களை தவிர்க்க
உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புகள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
**V2 Travels**
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
**0768226244**

**கார்/வான் வாடகைக்கு உண்டு**
கார்கள், வான்கள் வாடகைக்கு விடப்படும்.
RSP Rent a Car
தொடர்பு: 077 8989 691

**விற்பனைக்கு**
சுப்பர் கப் - 50CC ரக வாகனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 9911 025
076 6027 624

**வேலையாட்கள் தேவை**
யாழ். நகரில் இயங்கிவரும் வியாபார நிறுவனத்திற்கு கணக்காளர், முகாமையாளர், வேலையாட்கள் தேவை.
தொடர்பிற்கு:
077 9911 025, 076 602 7624

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில்**
**30 பரப்புக் காணி விற்பனைக்கு**

- ✓ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- ✓யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- ✓2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
- ✓பார்வையிடும் நேரம்: காலை 06.00 - மாலை 6.00

**தொடர்பு: 077 911 6983**
**076 755 8606**


## கண்காட்சியும் விழிப்புணர்வும்

அளவெட்டி மல்லாக பிரதேச எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட, அளவெட்டி மல்லாக பிரதேசம் தொடர்பான நூல்களின் கண்காட்சியும் "மாணவர்களைப் போதையின் பாதையில் இருந்து பாதுகாக்கும் விழிப்புணர்வும்" இன்று புதன்கிழமை அருணோதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு கண்காட்சியும் 9 மணிக்கு விழிப்புணர்வும் இடம்பெறவுள்ளது. மல்லாக உபஅலுவலகப் பொறுப்பதிகாரி செல்லத்துரை வசீகரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளில், பிரதம விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேசசபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

(எ-14)


# வீனஸ் விசேட வைத்தியசாலை

VENUS SPECIALITY HOSPITAL (PVT) LTD

**VENUS SPECIALITY HOSPITAL (PVT) LTD**

**தனது தரமான மருத்துவ சேவையை வழங்கிய வீனஸ் விசேட வைத்தியசாலை OCTOBER-19 இல் அடுத்த சகாப்தத்தில் தடம் பதிக்கின்றதில் பெருமை கொள்கிறது.**

**"தனது ஆக்கபூர்வமான சேவையை வழங்கிட எமக்கு வாய்ப்புத்தந்த வைத்தியர் குழாம், மக்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்"**

**வைத்திய நிபுணத்துவ சேவை**
அனைத்து நோய்களுக்குமான நிபுணர் சேவைகள்

**சத்திர சிகிச்சைகள்**
பொது சத்திரசிகிச்சைகள், எலும்பு முறிவு, நெரிவு, காது மூக்கு தொண்டை, பெண் நோயியல் மற்றும் மகப்பேறு சத்திர சிகிச்சைகள், பிளாஸ்டிக், முக சீரமைப்பு, நரம்பியல், இரப்பை குடல் உட்பட அனைத்து சத்திரசிகிச்சைகளும் நவீன முறையிலான தொழில்நுட்பத்துடன் Modular Operation Theatre ல் நியாயமான கட்டணத்தில் மேற்கொள்ளலாம்.

நவீன லேசர் அதிர்வலை மூலமாக அனைத்து சிறுநீரக சத்திர சிகிச்சைகளும் கைதேர்ந்த வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

**இதர சேவைகள்**
- ENDOSCOPY பிரிவு
- COLONOSCOPY பிரிவு
- LAPROSCOPY பிரிவு
- E CHO CARDIOGIRAM
- SCANING பிரிவு
- DIGITAL X-RAY பிரிவு
- CT-Scan பிரிவு
- சிறுநீரக "டயலசில்" பிரிவு




**136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**அனைத்து வித மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கு 24 மணிநேரமும் எம்மை தொடர்பு கொள்ளலாம்**
**021 222 4172 / 021 222 8470**
**070 613 6136 / 021 222 8475**
**venushos136@gmail.com**
**venushospitaljaffna.com**

- ❖ காலை 8.00 மணிக்கு வைத்திய சாலை வளாகத்தில் உள்ள விநாயகர் கோவில் பூசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.
- ❖ "உயிர் காக்கு உன்னத பணி" எனும் தொனிப் பொருளில் வைத்தியசாலை பணியாளர்களினால் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்யப்படும்.
- ❖ அதனைத் தொடர்ந்து சலுகைகளுடன் கூடிய வைத்திய சேவைகள் தொடர்ந்து நடைபெறும்.

**இதர சேவைகள்:**
- ❖ 24 மணிநேர OPD சேவை
- ❖ 24 மணிநேர Ward சேவை
- ❖ ICU / ETU பிரிவுகள்
- ❖ Modular Operation Theatre பிரிவுகள்
- ❖ உயர் தொழில்நுட்ப ஆய்வுகூடம்
- ❖ உள்ளக பார்மசி
- ❖ Underground வாகன தரிப்பிடம்

(CR 38313) (3/6)



செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.